# சோஷலிஸம்

ஜூன் 1979 6

சோவியத் மாசிகை

## தத்துவமும் நடைமுறையும்

கட்சியும் இளைஞர்களும்

★

ஒன்றியக் குடியரசு
பூரண இறைமையுள்ள ஒரு ராஜ்யம்

★

சோ. க. க உறுப்பினராக
இருக்க யாருக்குத் தகுதி உண்டு?

★

விஞ்ஞானம், தொழில் நுட்பமும்
நவ-காலனியாதிக்கமும்

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

6 (41) 1979

# சோஷலிஸம்

## தத்துவமும் நடைமுறையும்

சோவியத் சித்தாந்த அரசியல் பத்திரிகைகளின் மாதாந்த மஞ்சரி

நொவஸ்தி செய்தி ஸ்தாபனத் தயாரிப்பு

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
KA'/4
LIBRARY

27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த, கொழும்பு 7 லுள்ள சோவியத் சோஷலிஸக் குடியரசுகள் ஒன்றிய தூதரக தகவல் பிரிவின் தலைவர் இகோர் வி. ஷுலோவ் அவர்களால் கொழும்பு-10, 93, மாளிகாகந்த ரோட், மருதானையிலுள்ள பிரகதி அச்சகத்தில் அசிச்ட்டு வெளியிடப்பட்டது.

## உள்ளடக்கம்


| பகுதி | கட்டுரை | பக்கம் |
|---|---|---|
| இன்றைய விவகாரங்கள் | அரபு நாடுகளது கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சிகளது மகாநாட்டின் அறிக்கை | 03 |
| | அனரோலி டொவ்சான் சோ.சோ.கு.ஒ.வும் மனித உரிமைகளின் சர்வதேசப் பாதுகாப்பும் | 07 |
| | விக்டர் இஸ்ரேலியன் டி..எஸ்ஸி சோவியத் யூனியனும் அணு ஆயுதப் பரிகரணமும் | 12 |
| மார்க்ஸியம்—லெனினியமும் எமது காலமும் | ஜியோர்ஜி கிம் எமது காலத்தின் அம்சங்கள் | 17 |
| வரலாறும் அனுபவமும் | சற் அப்றஸ்யென் கட்சியும் இளைஞர்களும் | 22 |
| | எட்வேர்ட் ரடவொஸியான் ஒன்றியக் குடியரசு பூரண இறைமையுள்ள ஒரு ராஜ்யம் | 27 |
| சோவியத் சமுதாயம்-வாழ்வும் பிரச்னைகளும் | சோ.க.க. உறுப்பினராக இருக்க யாருக்கு தகுதி உண்டு. | 32 |
| | எலெனு நொவிகோவா சிறுவர்களுக்கானதோர் ஆனந்த எதிர்காலம் | 38 |
| சோஷலிஸமும் இன்றைய உலகும் | ப. பொ. உ. க-சில சிறப்பம்சங்கள் | 43 |
| | யும்ஜாகின் செடென்பால் மொங்கோலியா: முதலாளித்துவமற்ற வளர்ச்சிப்பாதை | 45 |
| வளர்முக நாடுகளின் இன்றைய பிரச்னைகள் | பின்தள்ளப்பட முடியாத நிகழ்வுப் போக்கு | 51 |
| ஏகாதிபத்தியத்தின் சுயரூபம் | ருடொல்ஃப் ஸிமென்கோவ் விஞ்ஞானம், தொழில்நுட்பமும் நவ-காலனியாதிக்கமும் | 56 |
| சித்தாந்த அரங்கு | மிக்கிறிச் நட்செகன்யன் நவ-கலோனியலிஸ சித்தாந்தம் | 61 |


## இன்றைய விவகாரங்கள்

# அரபு நாடுகளது கம்யூனிஸ்ட் தொழிலாளர் கட்சிகளது மகாநாட்டின் அறிக்கை

உலக அரசியலின் அவசர பிரச்சினைகள் பற்றியும் மத்திய கிழக்கு நிலைமை பற்றியும் விவாதிப்பதற்காக 1978 டிசம்பர் மாதம், அரபு நாடுகளது கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகள் டமாஸ்களில் (சிரியா) மகாநாடொன்றை நடாத்தின.

கீழே அதன் அறிக்கையின் சுருக்கத்தைத் தருகிறோம்.

சர்வதேச உறவுகளை மீண்டும் சிக்கல்படுத்தவும் ஆயுதப் போட்டியை வேகப்படுத்தவும் வளர்ந்து வரும் தேசிய விமோசன இயக்கத்தை அடக்கவும் ஏகாதிபத்திய வட்டாரங்கள், குறிப்பாக ஐக்கிய அமெரிக்கா அண்மைக் காலத்தில் தனது நடவடிக்கைகளை அதிகரித்துள்ளது. தனது அரசியல். பொருளாதார, சமுதாய அமைப்புக்களைத் தாக்கும் மோசமான நெருக்கடிகளின் பின் விளைவுகளைத் தவிர்ப்பதற்கு ஏகாதிபத்தியம் முயற்சிக்கிறது. ஏகாதிபத்திய ராணுவ அணியான ''நேட்டோ''வின் நடவடிக்கைகளை உலகின் இதர பகுதிகளில் குறிப்பாக ஆபிரிக்காவில் விஸ்தரிப்பதற்கும், புதிய ராணுவக் கூட்டணிகளையும், செங்கடலிலும் பாரசீகக் குடாவிலும் உள்ளது போன்ற பிராந்திய ''பந்தோபஸ்து'' அமைப்புக்களையும் உருவாக்குவதற்கும் பிரயத்தனங்கள் எடுக்கப்பட்டுவருகின்றன.

1978 மே மாதம் வாஷிங்டனில் நடைபெற்ற நோட்டோ கூட்டம் தெளிவாக்கிய அபாயகரமான ஏகாதிபத்தியத் திட்டங்களுக்குமாறாக, சர்வதேச சமாதா

னத்தை வலுப்படுத்துவது, இணக்கவமைதியை ஆழப்படுத்துவது, ஆயுதப்பரிகரணத்தைக்காணல், தேசிய விமோசனத்துக்கும், சகல நாடுகளும் மக்களும் சுதந்திரமாகவும் சுயாதிபத்தியத்துடனும் வாழவும் மக்கள் தொடுத்துள்ள போராட்டத்துக்கு ஆதரவளித்தல் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட கோட்பாடு ரீதியான, முரண்படாற்ற கொள்கையை சோவியத் யூனியனும் இதர சோஷலிஸ நாடுகளும் பின்பற்றுகின்றன. இக் கொள்கையை, 1978 நவம்பரில் நடைபெற்ற வார்ஸா ஒப்பந்த நாடுகளின் அரசியல் ஆலோசனைக் கூட்டம் நன்கு பிரதிபலித்தது. இந் நாடுகள், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்து, கைப்பற்றப்பட்ட அரபு நிலங்களை விடுவிப்பதற்காகவும், பாலஸ்தீன அரபுக்களது சட்டபூர்வமான தேசிய உரிமைகளுக்காகவும் போராடும் அரபு மக்களுக்கு ஆதரவளிக்கும் தனது கோட்பாடுரீதியான, உறுதியான நிலையை மீண்டும் உறுதிசெய்துள்ளன.

தேசிய விமோசனத்தின் சாதனைகளும் வெற்றிகளும் குறிப்பிடத்தக்கவை, முக்கியமாக ஆப்கானிஸ்தான், எதியோப்பியா, அங்கோலா, மொஸாம்பிக், மற்றும் நாடுகளின் புரட்சிகர சக்திகளின் உறுதியான நிலைபாடுகளும், பிரெடோரியா, சாலிஸ்பரி ஆகியவற்றின் இனவெறி ஆட்சிகள் தனிமைப்பட்டுள்ளதும், ஸிம்பாப்வே, நாமிபியா மக்களது போராட்டம் அதிகரித்திருப்பதும், தென்னுபிரிக்க மக்களது உறுதியும், சர்வாதிகார ஆட்சிக்கு எதிராக நிக்காராகுவா மக்களது எழுச்சியும், ஜனநாயகத்தை நிலைநாட்டவும் ஏகாதிபத்திய மேலாதிக்கத்துக்கு எதிராகவும் ஈரானிய மக்கள் தொடுத்துள்ள போராட்டமும் குறிப்பிடத்தக்கவை.

அரபு தேசிய விமோசன இயக்கத்தைக் சீர்குலைக்க ஏகாதிபத்தியத்தின் சூழ்ச்சிகளதிகரித்துள்ளன. காம்ப் டேவிட் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டு சதாத் இழைத்த துரோகமானது, பதவிக்குவந்த முதல் நாள் தொட்டு அவர்பின்பற்றும் கொள்கையின் ஒரு தர்க்கரீதியான தொடர் நிகழ்வும், எகிப்தில் ஏற்படுத்தப்பட்ட புரட்சிகர மாற்றங்களை அகற்றிவிட்டு ஏகாதிபத்திய நடவடிக்கைகளுக்கு வழிதிறந்து விட்டதினது பின் விளைவுமாகும். இக் காம்ப் டேவிட் ஒப்பந்தமானது அரபு, ஆபிரிக்க தேசிய விமோசன இயக்கங்களுக்கு எதிரான இஸ்ரேலிய—அமெரிக்கக் கூட்டணியைத் தோற்றுவித்துள்ளது.

மத்தியகிழக்கு பகுதி முழுவதிலும் அமெரிக்காவின் அரசியல், பொருளாதார, இராணுவ மேலாதிக்கத்தை விஸ்தரிப்பதை அனுகூலமாக்குவதையும், எண்ணெய் வள அரபு நாடுகள் முழுவதிலும் அதன் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்துவதையும், அரபு தேசிய விமோசன இயக்கத்தின் வெற்றிகளைத் துடைத்தெறிவதையும், சர்வதேச இணக்கவமைதியை நிர்மூலமாக்கும் ஏகாதிபத்தியக் கொள்கையை செயல்படுத்த மத்தியகிழக்கைப் பயன்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டவைதாம் காம்ப் டேவிட் ஒப்பந்தங்கள்.



டமாஸ்கஸில் நடைபெற்ற அனைத்து அரபு தேசிய காங்கிரஸின் தெட்டத் தெளிவான ஏகாதிபத்திய—விரோதப் போக்குகளை அரபு மக்கள் பின்பற்றுகிறார்கள். ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டம், சோவியத் யூனியனுடனான நட்புறவையும் ஒத்துழைப்பையும் வலுப்படுத்துதல் என்ற சுலோகத்தை அவர்கள் முன்வைக்கிறார்கள்.

அரபு நாடுகளில் அரசாங்க மட்டத்தில் பல முன்முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. அரபுக்களின் உறுதி வாய்ந்த போராட்ட அணியின் அங்கத்துவ நாடுகளது உச்சிமகாநாடொன்று டமாஸ்கஸில் நடைபெற்றது. ஐக்கிய அமெரிக்கா, மத்தியகிழக்கின் சமரசத்துக்கு ஒரு தரகனல்ல, பதிலாக அது ஒரு எதிரியே என்பதையும் சோவியத் யூனியனுடன் போருபாய கூட்டணியை ஏற்படுத்த வேண்டிய அவசியத்தையும் இம் மகாநாட்டில் கலந்து கொண்டவர்கள் சுட்டிக்காட்டினர். சிரிய, ஈராக் தலைவர்களது சந்திப்பும், ஏகாதிபத்தியத்துக்குச் சரணடையும் திட்டங்களுக்கு அடிகொடுப்பதாயமைந்தது. இந்த உச்சி மகாநாடும், சிரிய ஈராக், தலைவர்களது சந்திப்பும் பாக்தாத் உச்சிமகாநாட்டைக் கூட்டுவதற்கும், காம்ப் டேவிட் ஒப்பந்தங்களை நிராகரிக்கும் அரபு மக்களது ஏகோபித்த கருத்தைப் பிரதிபலிக்கும் தீர்மானங்களை நிறைவேற்றவும் பங்காற்றின என்பது குறிப்பிடத்தக்கது.

முற்போக்கு எண்ணங்கொண்ட மக்களது அணியை உறுதிப்படுத்துவதும் அவர்களது சகல சக்திகளையும் ஒன்றுதிரட்டுவதும் தான் இச்சரணடையும் போக்கினை வெற்றிகரமாக எதிர்ப்பதற்கான பிரதான நிலைபாடுகள் என்று அரபு நாடுகளது கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகள் நம்புகின்றன. இவையனைத்திற்கும் முற்போக்கான, தேசபக்த அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள், வெகுஜன, தொழிற் சங்க ஸ்தாபனங்களது நடவடிக்கைகளின் ஜனநாயக பூர்வமான சுதந்தித்தை அறிமுகப்படுத்துவதும், அனுகூலமான நிலைகளைர உருவாக்குவதுமவசியம். வெற்றியை அடையவேண்டுமாயின் கம்யூனிஸ்டுகள், பாதிஸிஸ்டுகள், நாஸரிட்டுகள், சோஷலிஸ்டுகள் தேசியவாதிகள் மற்றும் இதர முற்போக்குச் சக்திகளையும் சகல அரபு புரட்சிச் சக்திகளையும் உள்ளடக்கிய முற்போக்கு அரபு ஐக்கிய முன்னணி ஒன்றை ஸ்தாபிப்பது மிகமிக அவசியமாகும். இந்த முன்னணி, ஒவ்வொருதரப்பினதும் ஸ்தாபன, அரசியல், சித்தாந்த சுதந்திரத்தை கௌரவிப்பது, ஏகாதி

பத்திய விரோத கூட்டுவேலைத்திட்டத்தை அனுசரித்து நடப்பது என்ற அடிப்படையைக் கொண்டிருக்க வேண்டும். இந்த வேலைத்திட்டம், ஏகாதிபத்தியம், ஸியோனிஸம், அரபு பிற்போக்கு ஆகியவற்றிற் கெதிரான போராட்ட இலக்குகளையும், நண்பனையும் எதிரியையும் தெளிவாக இனங்காட்டுவதையும், இக் கூட்டணியின் தரப்புக்கள் வும்யா தமக்கிடையில் எழும் வேறுபாடுகளை ஜனநாயக ரீதியில் பேச்சுவார்த்தைகளின் வழியே தீர்த்துக்கொள்ள வேண்டியதையும் தெளிவாகக் காட்டவேண்டும்.

தேசபக்த முன்னணியின் உறுப்பினர்களுக்கிடையிலான உறவுகளில் பலமுறை ஏற்பட்ட எதிர்மறையான போக்குகள், இதனுல் தேசபக்த முன்னணியின் அணிக்குள் ஏற்பட்ட அபாயகரமான பிளவுகள், அதனுல் மெய்யான எதிரிக்கெதிரான போராட்டத்திலிருந்து திசை திரும்பியமை ஆகிய இவை குறித்து அரபு நாடுகளின் கம்யூனிஸ்ட், தொழிலாளர் கட்சிகள் கவலை தெரிவிக்கின்றன. அரபு பிற்போக்கின் சூழ்ச்சிகள் குறித்து விழிப்பாக இருக்க வேண்டுமெனக் குரல் கொடுத்த அவை அடக்குமுறைகளுக்காளான அரபு தேசபக்த சக்திகளுடனை தமது ஒருமைப்பாட்டைப் பிரகடனப்படுத்தின.

அரபு நாடுகளில் இன்று ஏற்பட்டுள்ள சிக்கலான பிரச்சினைகளில், ஜனநாயக சுதந்திரம் பற்றிய விவகாரம் தலையாய முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. வெகுஜனங்களுக்கு ஜனநாயக சுதந்திரங்களை அளிப்பதும், தமது அபிப்பிராயத்தை வெளியிட அவர்களுக்குள்ள உரிமைகளைக் கௌரவிப்பதும் சுதந்திரமான அரசியல், பொதுஜன ஸ்தாபனங்களை உருவாக்குவதும் அனைத்து அரபு தேசிய முற்போக்குச்சக்திகளது தலையாய கோரிக்கையாகும்.

அரபு மக்களும்க்கும், அரபு தேசிய விமோசன இயக்கதிற்கும் அவை முகம்கொடுக்கும் கஷ்டங்களையும் தடைகளையும் தாண்டுவதற்கும் ஏகாதிபத்திய, ஸியோனிஸ, அரபு பிற்போக்கின் சூழ்ச்சித் திட்டங்களைத் தோற்கடிக்கவும், கடைகெட்ட காம்ப் டேவிட் ஒப்பந்தங்களை செல்லாத தாக்கவும் சகல சக்திகளுமுள்ளன என்று அரபு நாடுகளது கம்யூனிஸ்ட் கட்சிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றன. இம் மாபெரும் இலக்குகளை அடைவதற்கு தேசிய முற்போக்கு சக்திகளை ஒன்று திரட்டி ஐக்கியப்படுத்துவதும், உலகப்புரட்சிகர இயக்கத்தினதும் அதன் முன்னணிப் படையான சோவியத் யூனியன் இதர சோஷலிஸ நாடுகளினதும் ஆதரவைப் பெறுவதும் அவசியம். இதற்காக அரபு நாடுகளது கம்யூனிஸ்டுகள், இதர அரபு தேசபக்தர்களுடன் சகலவழிகளிலும் ஒத்துழைப்புக்களை மேற்கொள்வர்.

பிராவ்தா ஜனவரி 13,1979

அனரோலி மொவ்சான்

# சோ. சோ. கு. ஒ. வும் மனித உரிமைகளின் சர்வதேசப் பாதுகாப்பும்

**சோ.சோ.கு.ஒ.வும் ஏனைய சோஷலிஸ நாடுகளும் சர்வதேச உறவுகளில் மனிதத்துவத்தினை அடைவதற்காகவும். மனித உரிமைகளின் சர்வதேச சட்டபூர்வமான பாதுகாப்புக் கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதற்காகவும் திடமாக வேலைசெய்துவருகின்றன. உலக அரசியலின் இத் தோற்றப்பாடு சர்வதேச ஒத்துழைப்பிற்கான மிக முக்கிய காரணியெனா அவர்கள் கருதுகிருர்கள்.**

## உண்மையான ஜனநாயகத்தின் அடிப்படை

முதலாளித்துவ நாடுகள் அடிப்படை மனித உரிமைகள், சுதந்திரங்கள் என்பவற்றை அடைவதற்கு சர்வதேச ஒத்துழைப்பினை என்றுமே இலக்காகக் கொண்டிருக்கவில்லை. சமாதானம், ஜனநாயகம், சமூக முன்னேற்றம் என்பவற்றில் தொடர்ந்து உறுதியான தலைமையேற்றுவரும் முதலாவது சோஷலிஸ அரசிற்தான் இந்த மனிதாபிமானக் கொள்கைகள் முதன்முறையாக உதயமாகின. 1917-ம் ஆண்டின் மாபெரும் அக்டோபர் சோஷலிஸப் புரட்சி சகல உழைக்கும் மக்களுக்குமான, ஒவ்வொரு தனி மனிதனுக்குமான உண்மையான ஜனநாயகத்திற்கேற்ற அடிக்கல்லை இட்டது. அடக்குமுறை, சுரண்டல், கொடுமை என்பவற்றிலிருந்து விடுதலை பெறுதல் ஏனைய உரிமைகள், சுதந்திரங்கள் என்பவற்றின் அடித்தளமாக இருந்து வருகிறது.

சோஷலிஸத்தின் பெருந்தொகையான லாயங்களில் ஜனநாயக உரிமைகள், சுதந்திரங்கள் என்பன சட்டபூர்வமாக விபரிக்கப்பட்டுள்ளன. ரஷ்ய மக்களின் உரிமைகளுக்கான பிரகடனம், சொத்துடமை அந்தஸ்த்து, குடியியல் அந்தஸ்த்து என்பவற்றை அழித்தல், அரசிலிருந்து தேவாலயங்களை வேறுபடுத்தல், தேவாலயங்களிலிருந்து, பாடசாலைகளை வேறுபடுத்தல் என்பவற்றிற்கான சட்டங்கள், ஆரம்பகால சோவியத் அரசியல் யாப்பு என்பவற்றிலெல்லாம் இவை தெளிவாக விபரிக்கப்பட்டுள்ளன.

மாபெரும் அக்டோபர் புரட்சியினால் பிரகடனஞ் செய்யப்பட்ட ஜனநாயகக் கொள்கைகள் உலக மக்களால் பரவலாக வரவேற்கப்பட்டுள்ளன. சோவியத்தின் உதாரணத்தின் மூலம் ஏனைய நாடுகளிலுள்ள உழைக்கும் மக்கள் உரிமைகள், சுதந்திரங்கள் என்பவற்றின் உண்மையான கருத்தினைக் கண்டு கொண்டார்கள் அத்துடன் இவற்றை வென்றெடுப்பதற்கான போராட்டங்களிலும் அவர்கள் ஈடுபடத்தொடங்கினார்கள்.

## மனித உரிமைகளின் சர்வதேச மதிப்பு

மக்களின் உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் செயற்பாட்டில் ஜனநாயக உரிமைகளும், தனிமனித சுதந்திரங்களும் வேறுபடுத்த முடியாதன என்பதனை சோவியத் அரசாங்கம் ஏனைய நாடுகளின் கவனத்திற்கு, அவற்றுடன் நட்புறவுகளை நிறுவிய நாள்முதல் மீண்டும், மீண்டும் சுட்டிக்காட்டி வருகிறது.

சோவியத் ஒன்றியம் 1939-1945-ல் பாசிஸத்தினைத் தோற்கடிப்பதில் காத்திரமானதோர் பாத்திரத்தினை வகித்து, மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் கணிசமான பங்களிப்பினை நல்கியுள்ளது. மனித உரிமைகள், தனிமனித அடிப்படைச் சுதந்திரங்கள் என்பவற்றிற்கான மக்களின் கோரிக்கைகளை சோ.சோ.கு.ஒ. தொடர்ந்து ஆதரித்து வருவது ஐக்கிய நாடுகளின் சாசனங்களில் பிரதிபலிக்கின்றன. இந்தச் சாஸனம் உருவாவதற்கான முக்கிய நாடுகளில் ஒன்றான சோவியத் ஒன்றியம் ஐ. நா. அங்கத்தவ நாடுகள் அடிப்படை மனித உரிமைகள், மனித ஆளுமையின் மதிப்பு அந்தஸ்த்து, ஆண்களுக்கும் பெண்களுக்கும் இடையிலும் சிறிய நாடுகளுக்கும், பெரிய நாடுகளுக்கிடையிலும் சமத்துவம் என்பவற்றை மீள உறுதிசெய்ய வேண்டுமென்பதற்கான பிரேரணையைக் கொண்டுவந்தது. ஐ.நா.சாஸனம் நாடுகளின் மத்துவமும், சுயநிர்ணயமும், நாடுகளுக்கிடையில் பாரபட்சங்களை அங்கீகரிக்காமை, வாழ்க்கைத்தரங்களை மேம்படுத்துதல், முழுஅளவில் வேலைவாய்ப்புகளை வழங்குதல் போன்ற பெருங்கொள்கைகளையும் தன்னுள் அடக்கியுள்ளது.



நாடுகளுக்கிடையிலான உறவுகளின் சகஜநிலைக்கு வித்திட்ட இக்கொள்கைகளின் அங்கீகாரம், மேற்கொண்டு இவற்றின் அபிவிருத்திகள் என்பன சர்வதேச ஆவணங்கள் பலவற்றில் பிரதிபலிப்பதைக் காணக் கூடியதாயுள்ளது. மனித உரிமைகளின் சர்வதேச பிரகடனம் 1948, உலக சமாதானத்தையும், ஒத்துழைப்பினையும் மேம்படுத்துவதற்கான பிரகடனம் 1955, இனரீதியான பாரபட்சங்களின் சகல வடிவங்களையும் நீக்கிவிடுவதற்கான ஐ.நா.பிரகடனம் 1963,1966-ல் ஐ.நா.வினால் நடைமுறைப்படுத்தப்பட்ட மனித உரிமைகள் மீதான சர்வதேச ஒப்பந்தம் என்பன அவற்றுள் சிலவாகும். இந்தவகையில் ஐரோப்பாவில் பாதுகாப்பும், ஒத்துழைப்பும் சம்பந்தமான மகாநாட்டின் இறுதிப் பிரகடனத்தில் 1975, ஆகஸ்ட் 1-ந்-திகதி 33 ஐரோப்பிய நாடுகள் கைச்சாத்திட்டன, இதில் ஐக்கிய அமெரிக்காவும், கனடாவும் கைச்சாத்திட்டமை விசேஷ முக்கியத்துவம் வாய்ந்த செயற்பாடகும்.

சோவியத் ஒன்றியம் இக்கொள்கைகளுக்கு உயிரளித்து நவீன சர்வதேச உறவுமுறைகளில் இவற்றை உபயோகிப்பதில் தன்னாலான மிகவுயர்ந்த பங்கினை ஆற்றிவருகிறது. சோ.சோ.கு.ஒ.வின் புதிய 1977 அரசியல் யாப்பு இதனை நன்கு படம்பிடித்துக் காட்டுகின்றது. அத்துடன் அதுமனித உரிமைகளுக்கும், அடிப்படைச் சுதந்திரங்களுக்கும் பாதுகாப்பளிக்கின்றது, இவற்றின் மீதுதான் சோ.சோ.கு.ஒ ஏனைய நாடுகளுடன் நல்லுறவுகளைக் கட்டியெழுப்பிவருகின்றது.

## உலக சமதானம், பாதுகாப்பு என்பவற்றின் நலன்களில்

மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் ஒத்துழைப்பினை நல்கவேண்டியதுபற்றிக் குறிப்பிடும் ஐ.நா.சாஸனம் உலக சமாதானம், சர்வதேச பாதுகாப்பு என்பவற்றைப் பலப்படுத்துவதற்கான நலன்களில் இவ்வொத்துழைப்பின் அவசியம் அங்கீகரிக்கப்பட்டுள்ளதனை நிறுவுகின்றது. மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் என்பவற்றின் சர்வதேச மதிப்பினை மேம்படுத்தும் செயற்பாடுகள் எவ்வித விதிவிலக்குகளுமின்றி ஒவ்வோர் இடங்களிலும் நடைமுறைப்படுத்தப்படவேண்டும். இதன் பின்னர் மட்டுமே மனித உரிமைகள் பற்றிய தளத்தில் சர்வதேச ஒததுழைப்பு சகல நாடுகளுக்கிடையிலும் சமாதானம், நட்புறவு என்பவற்றிற்கு அவசியமான நிலைமைகளைக் கொண்டுவரும்.

மனித உரிமைகள், சுதந்திரங்கள் என்பவற்றின் நேரடி விதிமுறைகள் சமூக, அரசு முறைகளுக்கு ஏற்ப குணம்சப் பண்புகளைக் கொண்டிருப்பது ஒவ்வொரு நாட்டினதும் உள்நாட்டு விவகாரமாகும், அத்துடன் சட்டத்தால் விதிக்கப்

பட்ட அமைப்புக்கள், விதிமுறைகள் என்பவற்றிற்கமைவாகவே மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. ஓர் அரசின் உள்நாட்டு நீதி விவகாரங்களில் தலையிடும் உரிமை எவருக்கும்கிடையாது, ஐக்கிய நாடுகள் சபைக்கோ, அல்லது வேறெந்த நாடுகளின் குழுவிற்கோ, அல்லது வேறெந்த தனிநாட்டிற்கோ, அத்தனிநாட்டின் அதிகாரிகளுக்கோ—அவர் எப்பதவியை வகிப்பவராயினும் இவ்வுரிமை கிடையாது. இது சர்வதேசச் சட்டமென்ற முறையில் உலகளாவிய அங்கீகாரம்பெற்ற கொள்கையாகும், அத்துடன் இது ஐ.நா. உருவாக்கப்பட்டபோதும், மனித உரிமைகள் சம்பந்தமாக மேற்கொண்ட நடவடிக்கைகளின் போதும், ஐரோப்பாவில பாதுகாப்பு, ஒத்துழைப்பு மகாநாட்டின் போதும் காலத்திற்குக் காலம் மீள உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஐ.நா. உருவாக்கப்பட்டபோது மனித உரிமைகள் பற்றிய விவகாரத்தில் சர்வதேச ஒத்துழைப்பு, இத்துறையில் பல்வேறு ஐ.நா. உறுப்புக்களின் செயற்பாடுகள் என்பன ஐ.நா.அங்கத்தவ நாடுகளின் பரிந்துரைப்பின்பேரில் ஆற்றப்படவேண்டும் என்பது ஒத்துக்கொள்ளப்பட்டது. இவ்வங்கத்தவ நாடுகள் தத்தமது சட்டதிட்டங்களுக்கமைவாக மனித உரிமைகளையும், சுதந்திரங்களையும் உறுதிப்படுத்துவதற்கு நேரடிப் பொறுப்பு வாய்ந்தனவாக இருக்கின்றன. இந்த வகையில் அங்கத்தவ நாடுகளின் முதலாவது பரிந்துரைப்பின்பேரில் அகில உலக மனித உரிமைகள் பிரகடனம் உருவாக்கப்பட்டது. இதன் முன்னோடியான சோவியத் ஒன்றியம் ஆரம்ப மனித உரிமைகளாகிய வாழும் உரிமை, சுதந்திரம், குடியியல்-அரசியல் சுதந்திரங்கள் சிந்தனைச் சுதந்திரம், கூட்டம் கூடவும், நிறுவனங்களை அமைக்கவுமான சுதந்திரம் என்பவற்றுடன் வேலைசெய்யும் உரிமை, தொழிலைத் நேர்ந்தெடுக்கும் சுதந்திரம், சமனான வேலைக்கு சமகூலிபெறும் உரிமை, வேலையில்லாத் திண்டாட்டத்திலிருந்து பாதுகாப்பு, கல்வி கற்கும் உரிமை, சமூகப் பாதுகாப்பு என்பவைகளையும்,ஏனையவற்றையும் நடைமுறையில் கொண்டுள்ளது.

சோவியத் ஒன்றியத்தினதும், ஏனைய சோஷலிஸ நாடுகளினதும் செயற்பாடுகளும், அவற்றின் அரசியல் யாப்புக்களும் சட்டங்களும் பொருளாதாரத் திட்டங்களும் உண்மையான சமூக-பொருளாதார, ஏனைய உரிமைகளையும்,



தனிமனித சுதந்திரங்களையும், மக்களுடைய நலன்களின் திடமான வளர்ச்சியினையும் உறுதிசெய்கின்றன. மனித உரிமைகள் என்ற துறையில் சோஷலிஸ நாடுகள் பின்பற்றிவரும் சர்வதேச ஒத்துழைப்புக் கொள்கை இதுவேயாகும்.

★ ★ ★

ஜனநாயக மனித உரிமைகள், சுதந்திரங்கள் என்பவற்றின் சர்வதேச மதிப்பினைமேலெடுத்துச் செல்வதற்கான பாதையைப் பின்பற்றி வருவதற்காக சோவியத் ஒன்றியத்திற்கும், ஏனைய சோஷலிஸ நாடுகளுக்கும் பல ஆசிய ஆபிரிக்க, லத்தீனமரிக்க வளர்முக நாடுகள் செயலூக்கம் வாய்ந்த ஆதரவினை வழங்கி வருகின்றன. சோஷலிஸ, வளர்முக நாடுகளின் கூட்டுச்செயற்பாடுகள் மனிதாபிமானமற்ற சட்டங்களையும், ஏகாதிபத்தியம் வளர்த்துவரும் ஏனைய ஏற்றத்தாழ்வுகளையும் முடிவிற்குக்கொண்டுவந்து உண்மையான மனித உரிமைகளை உறுதிசெய்வதனை இலக்காகக் கொண்டுள்ளன.

விக்டர் இஸ்ரேலியன் டி.எஸ்ஸி (வரலாறு)

# சோவியத் யூனியனும் அணு ஆயுதப் பரிகரணமும்

இரண்டாவது உலக யுத்த (1939-1945)த்தின் முடிவுடன், மனிதவரலாற்றிலேயே மிக மோசமான அழிவாயுதமான அணுவாயுதங்கள் தோன்றிய நிகழ்வு ஒருங்கேயமைந்தது. அன்று முதல் அணுவாயுதங்கள் அதிகரித்து வருவதானது மனிதகுலத்தைப் படுமோசமாக அச்சுறுத்தி வருகிறது. எனவே சமாதானத்தையும் சர்வதேசப் பந்தோபஸ்தையும் பேணுவதற்கான சோவியத் யூனியனது பிரதான முயற்சிகளில் ஆயுதப்போட்டியை நிறுத்துவதற்கும் அணுவாயுதப் பரிகரணத்தைக் காண்பதற்குமான போராட்டமும் ஒன்று.

## சமாதான நோக்கத்துக்காக மட்டும்....

இந்த அணுவாயுதங்களைப் பூரணமாகவும், நிபந்தனையற்ற விதத்திலும் தடைசெய்யவும், அவற்றை அழித்தொழித்து விடவும் வேண்டுமென வலியுறுத்திவரும் சோவியத் யூனியன், இப்பணியைப் பூர்த்திசெய்யாத வரையில் சமாதானத்தைப் பாதுகாப்பதென்பது சாத்தியமானதல்ல எனக் கருதுகிறது.

1946 ஜூன் 19ல் நடைபெற்ற ஐ. நா. அணுசக்திக் கமிஷனின் முதல் அமர்வின்போது, அணுவாயுதங்களை உற்பத்திசெய்தல், சேமித்தல் ஆகியவற்றைத் தடைசெய்யும் சர்வதேச உடன்பாட்டிற்கான நகலை முன்வைத்தது. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அணுவாயுதங்களைப் பயன்படுத்தலாகாது; அணுவாயுத உற்பத்தியையும், சேமித்து வைத்தலையும் தடைசெய்ய வேண்டும்; இந்த உடன்பாடு அமுலுக்குவந்த மூன்று மாதங்களில் இந்த ஆயுதங்களின் சேமிப்பையும், அவற்றிற்கான தயாரிப்புக்களையும் அழித்து விடல்வேண்டும் இதுதான் அந்த நகலின் சாரம்;



இதனைத் தொடர்ந்து, அணுசக்தியைச் சட்டவிரோதமாகப் பயன்படுத்துவதைத் தடுக்கும் நடவடிக்கைகளுக்கும், சமாதான பூர்வமாக அணுக்சக்தியைப் பயன்படுத்தவும், அது குறித்த விஞ்ஞானத் தகவல்களை நாடுகளினதும் விஞ்ஞானம், கலாசாரத்தினதும் மேன்மைக்காகப் பரிமாறவும் சர்வதேச ஒத்துழைப்பு அவசியம் என்று சோவியத் யூனியன் வலியுறுத்தியது.

இந்த ஆலோசனைகள் தெட்டத் தெளிவானவையாக விருந்தன. ஆயினும் அமெரிக்காவினதும் அதன் நேசநாடுகளினதும் எதிர்ப்பின் காரணமாக இந்த உடன்பாடு உருவாகவில்லை.

முதலாளித்துவ நாடுகள் எதிர்மறையாகவும், இந்த உடன்பாட்டுக்கு விருப்பமற்றும் இருந்தபோதிலும் சோவியத் யூனியன் அணுவாயுதங்களைத் தடைசெய்வதற்கும் அணுசக்தியை சமாதான நோக்கங்களுக்காகப் பயன்படுத்துவதற்குமாகத் தொடர்ந்துழைந்துவந்தது.

அணுவாயுதப் பரிகரணப் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்காக, ஐ. நா. விலும், இதர சர்வதேச மகாநாடுகளிலும் கிடைத்த வாய்ப்புக்களனைத்தையும் சோவியத் யூனியன் விரிவாகப் பயன்படுத்தியுள்ளது. சோவியத் ஆலோசனைகளையொட்டிப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று, 1972ல் ஐ. நா. பொதுச் சபையின் 27வது கூட்டத் தொடரினல் நிறைவேற்றப்பட்ட, சர்வதேச உறவுகளில் வன்முறையைப் பயன்படுத்தாதிருப்பது, அணுவாயுதங்களை நிரந்தரமாகவே தடைசெய்வது என்பன குறித்த தீர்மானமாகும்.

அணுவாயுத உற்பத்தியை முடிவுக்குக் கொண்டுவருவதானது, அணுவாயுதப் பரிகரணத்துக்கான ஒரு தூண்டுகோலாக, சரியான ஆரம்பமாக இருக்கும் என்று ஆழமான பரிசீலனைகள் கூறுகின்றன.

சகல நாடுகளுமே அணுவாயுத உற்பத்தியை நிறுத்திவிட்டால், அதுவே அணுவாயுயங்களைக் குவிப்பதைத் தடுப்பதுடன், அணுவாயுதப் பரிகரணத்துக்கான மேலும் நம்பகமான அடித்தளம் அமையும் என்று சோவியத் யூனியன் நம்புகிறது. இந்த ஆலோசனை எந்தவொரு நாட்டினதும் பந்தோபஸ்தைத் தகர்த்துவிடாது, மாறாக இது சகல நாடுகளினதும் பந்தோபஸ்தைப் பலப்படுத்துகிறது. அணுவாயுத உற்பத்தி நிறுத்தத்தைத் தொடர்ந்து, அவற்றின் சேமிப்பைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும்.

ஐ. நா. பொதுச் சபையின் ஆயுதப் பரிகரணம் பற்றிய விசேட கூட்டத்தின்போது (1978 மே-ஜூன்) சோவியத் யூனியன் சமர்ப்பித்த, ''ஆயுதப் போட்டியை முடி

வுக்குக் கொண்டுவருவதற்கான செயல்முறை நடவடிக்கைகள்'' என்ற தஸ்தாவேஜு, சகலவிதமான அணுவாயுத உற்பத்தியை நிறுத்துவதற்கும் சேமிப்பைப் படிப்படியாகவும் பின்னர் முடிவாகவும் கொண்டுவருவதற்குமான ஆலோசனைகளைக் கொண்டிருந்தது. அணுவாயுத நாடுகளனைத்தும், அவற்றைக் கொண்டிராத பல நாடுகளும் கலந்துகொள்ளும் ஒரு தகுதியான மகாநாட்டை நடத்துவது பற்றியும் அது ஆலோசனை கூறியது.

ஐ. நா. பொதுச் சபையின் 33வது கூட்டத் (1978) தொடரும் இம்மகாநாடு பற்றிய கருத்துக்கு ஆதரவு தெரிவித்தது. இம்மகாநாடு பற்றிய மிக அவசியத் தேவையை நியூட்ரன் குண்டை உற்பத்தி செய்யும் அபாயகரமான திட்டங்களும் வேறு பல காரணிகளும் உறுதிப்படுத்தின.

## அணுவாயுத மற்ற நாடுகளது பாதுகாப்பு

அணு வாயுதங்களைக் கொண்டிராத நாடுகளின் பந்தோபஸ்தைப் பாதுகாப்பதற்கான விதிக்கும் சோவியத் யூனியன் கணிசமான பங்களிப்பைச் செய்துள்ளது.

சீனு தனது முதலாவது அணுவாயுதப் பரிசோதனையை நடாத்திய பின்னர், 1964இன் முடிவில், இந்தியாவே, அணுவாயுதங்களைக் கொண்டிராத நாடுகளின் பந்தோபஸ்து குறித்த பிரச்சினையை முதன் முதலில் எழுப்பியது. ஆயுதப் பரிகரணக் கமிட்டியில் நான்காண்டுகளாக நடைபெற்ற, அணுவாயுத உற்பத்தித் தடை உடன்படிக்கை பற்றிய பேச்சுவார்த்தைகளின் போது அணுவாயுதத் தாக்குதலிலிருந்து தமக்கு மேலதிகப் பாதுகாப்பு வேண்டுமென்று அணுவாயுதமற்ற நாடுகள் குரலெழுப்பின. சோவியத் யூனியன், இந்நாடுகளது சட்டபூர்வமான கோரிக்கையை நன்கு புரிந்துகொண்டது. இறுதியில் இத்தகைய பாதுகாப்புக் குறித்து 1968ல் சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒப்பந்தமொன்றைச் செய்துகொண்டன. 1968 ஜூன் 29ம் திகதிய பாதுகாப்புச் சபையின் 855வது தீர்மானத்தில் இது பதியப்பட்டது.

எந்தவொரு அணுவாயுதமற்ற நாடாவது, அணுவாயுதப் பெருக்கத்தடை உடன்படிக்கையின் எந்தவொரு தரப்பாவது அணுவாயுத ஆக்கிரமிப்புப் பயமுறுத்தலுக்குப் பலியாகும் பட்சத்தில் அதற்கு உடனடி உதவியளிக்கத் தயாராகவுள்ள நாடுகளில் சோவியத் யூனியனும் ஒன்று என பாதுகாப்புச் சபையில் உரையாற்றிய சோவியத் பிரதிநிதி குறிப்பிட்டார்.



அணுவாயுதங்களை உற்பத்தி செய்யவோ, பெற்றுக் கொள்ளவோ, தனது பிரதேசத்திற்குள் சேமித்துவைக்கவோ மறுக்கும் எந்தவொரு நாட்டிற்கெதிராகவும் தான் ஒருபோதும் அணுவாயுதங்களைப் பயன்படுத்தாது என்று சோவியத் யூனியன் ஐ. நா. பொதுச் சபையின் விசேஷ ஆயுதப்பரிகரணக் கூட்டத்தில் தெரிவித்தது. அத்துடன் அணுவாயுதமற்ற நாடுகளுடன் விசேஷ ஒப்பந்தமொன்றைச் செய்துகொள்ளத் தான் தயாராக இருப்பதாகக் கூறிய சோவியத் யூனியன் இதே கடப்பாடுகளை இதர அணுவாயுத வல்லரசுகளும் மேற்கொள்ளவேண்டுமென்று கூறியது.

## சோவியத் ஆலோசனைகளது எதார்த்தமும் செயல் தன்மையும்

33வது பொதுச்சபைக் கூட்டத்தில் சோவியத் யூனியன், அணுவ்வாயுதக் கட்டுப்பாடு குறித்த இரு முக்கிய ஆலோசனைகளை முன்வைத்தது: ஒன்று அணுவாயுதமற்ற நாடுகளது பாதுகாப்பு உத்தரவாதத்தை வலுப்படுத்துவதற்கான சர்வதேச உடன்படிக்கையைச் செய்வது குறித்தது; அடுத்து இன்று இத்தகைய ஆயுதங்களைக் கொண்டிராத நாடுகளது பிரதேசங்களில் அணுவாயுதங்களை இனிமேல் வைத்திருக்காமைக்கான சர்வதேச உடன்பாடுபற்றியது.

இவற்றிற்குத்தான் தயாராக விருப்பதாக ஐ. நா. பொதுச் சபையின் ஆயுதப்பரிகரணம் பற்றிய விசேஷ கூட்டத்தில் தெரிவித்த சோவியத் யூனியன் இதர அணுவாயுத வல்லரசுகளனைத்தும் இவற்றைச் செய்ய முன்வர வேண்டுமெனக் கோரியது. அணுவாயுதங்களைக் கொண்டிருக்காத சில நாடுகள், தமது பிரதேசங்களில் அணுவாயுதங்களை வைத்திருக்க யாரையும் அனுமதிக்கப் போவதில்லை என்று ஏற்கனவே அறிவித்துள்ளன.

இந்த ஆலோசனைகளது, முக்கியத்துவத்தை யாருமே அதீதப்படுதிக் கூறமுடியாது. இவ்வாலோசனைகள், ஆயுதப் பரிகரணப் பிரச்சினைகளின், அணுவாயுதத் துறையில் சோவியத் யூனியன் எடுத்துள்ள புதிய அணுகுமுறைகளில் ஒருபகுதியே.

சமீபத்திய ''ஸோல்ட்'' பேச்சுவார்த்தைகளின் போது ஓர் ஒப்பந்தத்தை செய்துகொள்வதற்காக சோவியத் யூனியன் எடுத்த கடும் முயற்சிகள், அணுவாயுத யுத்த அச்சுறுத்தலைக் குறைக்கும் விவகாரத்தில் விசேஷ முக்கியத்துவம் கொண்டுள்ளன.

வார்ஸா ஒப்பந்த நாடுகளது அரசியல் ஆலோசனைக் கமிட்டியின் மாஸ்கோ மகாநாட்டில் (1978) அணுவாயுதப் பரிகரணப் பிரச்சினைக்குப் பெருமுக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. இங்கு வெளியிடப்பட்ட பிரகடனம், இத்துறையில் உறுதியான பலாபலன்களை அடைவதை நோக்கமாகக் கொண்ட முக்கிய ஆலோசனைகளைக் கொண்டிருந்தது. அத்துடன் இன்றுள்ள படைக்கலச்சாலையிலிருந்து சகலவிதமான அணுவாயுதங்களையும் அகற்றவும் சமாதான நோக்கத்துக்கு அணுசக்தியைப் பயன்படுத்தவும் சோவியத் யூனியன், அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், சீனு ஆகிய ஐந்து வல்லசுகளும் பேச்சுவார்த்தைகளை நடத்தவும் அழைப்பு விடுத்துள்ளது.

—மெஸ்டுனுரோட்நயா, ஸிஷின் இல 1. 1979.

மார்க்ஸியம் லெனினியமும் எமது காலமும்

ஜியோர்ஜி இம்
சோவியத் விஞ்ஞானப் பேரவையின்
தொடர்பு உறுப்பினர்.

# எமது காலத்தின் அம்சங்கள்

யுத்த பிற்கால ஆண்டுகளில் உலகப் புரட்சிகரப் போக்குகளினதும் அவற்றின் ஒரு பகுதியான தேசிய விமோசன இயக்கத்தினதும் உறுதியான எழுச்சியைக் காணமுடிந்தது. இது நமது காலத்தின் மிக முனைப்பானதோர் அம்சமாகும்.

## பிரதான மாற்றங்கள்

உலக வளர்ச்சிப் போக்கில் முன்னரைக் காட்டிலும் அதிகமான செல்வாக்குச் செலுத்தும் வகையில் தேசிய விமோசன இயக்க மண்டலத்தில் பிரதான மாற்றங்கள் ஏற்பட்டுவருகின்றன. காலனியாதிக்க விரோத ஏகாதிபத்திய- விரோத தேசிய விமோசன இயக்கத்தைக் கவனத்திற் கொள்ளாது, இன்றைய சர்வதேச உறவுகள் பற்றி அபிப்பிராயம் கூறவியலாது. இதன் தாக்கம் தான் என்ன?

முதலில் கூறுவதாயின், தேசிய விமோசனத்தின் வெற்றிகள் இணக்க அமைதியை மேம்படுத்தும் காரணியாக மாறியுள்ளன. சோஷலிஸத்துக்கு சாதகமாக உலக சக்திகளின் சமநிலையில் ஏற்பட்ட மாற்றம் சர்வதேச சூழலை அபிவிருத்தி செய்யவும், சமாதானத்தையும் சர்வதேச ஒத்து

ழைப்பையும் வலுப்படுத்தவும் உறுதியான அடிப்படைகளாக அமைந்தன. விமோசனமடைந்த நாடுகளின் ஆதரவைப் பெற்ற இணக்க அமைதியை ஆழப்படுத்துவதற்காக சோவியத் யூனியன் பிரதான முன்முயற்சிகளை எடுத்துள்ளது. ஐரோப்பாவில் இணக்க அமைதியை நோக்கி அடையப் பெற்ற திட்டவட்டமான முன்னேற்றமானது வளர்முக நாடுகளது மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்றுள்ளதுடன், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக் கூட்டணியில் பங்கு பற்றுவதை எதிர்க்கவும், பிராந்திய பொருளாதார ஒத்துழைப்பை அபிவிருத்தி செய்யவும் அவர்களுக்கு வகை செய்தது. தென்கிழக்காசியாவை நடுநிலைப்படுத்துவது, தெற்காசியாவில் நல்ல அண்டையயல் ஒத்துழைப்பை உருவாக்குவதற்கான வழிகளைக் காண்பது, இந்து முத்திரத்தைச் சமாதான மண்டலமாக்குவது போன்ற சில பிரதான முன்முயற்சிகள் எடுக்கப்பட்டுள்ளன. தமது சமுதாய முன்னேற்றத்துக்குத் தேவையான பிரமாண்டமான பொருளாயத, மனித சக்தி வளங்களை உறுஞ்சி விடும் ஆயுதப் போட்டிக்குள் புதிய சுதந்திர நாடுகளை இழுத்து விடக் கூடியதான இன்றைய நிகழ்வுகள் காரணமாக ஆசியாக் கண்டத்தின் மக்களது ஒன்றிணைந்த முயற்சிகளின் வழியே ஆசியாவில் சமாதானத்தையும் ஸ்திரத்தன்மையையும் உறுதிப்படுத்துவது இன்றய தலையாய பணியாகவுள்ளது.

காலனியாதிக்க அமைப்புத் தகர்ந்ததும் தேசிய விமோசன இயக்கத்தின் வெற்றிகளும் சர்வதேச உறவுகளின் இயல்பை முற்றாகவே மாற்றிவிட்டன. ஆசியா ஆபிரிக்கா, லத்தினமெரிக்கா ,ஆகிய கண்டங்களில் காலனி, அரைக் காலனி நாடுகளுக்குப் பதிலாக புதிய தன்னாதிக்க நாடுகள் தோன்றியுள்ளன, உலக அரசியலில் தீர்க்கமானசக்திகளாக மாறியுள்ளன. இவை. ஏகாதிபத்தியம், நவ-காலனியாதிக்கம், இனவாதம் ஆகியவற்றுக்கெதிரான போராடத்தில் மகத்தான பங்களிப்பைச் செய்து வருகின்றன. இந்நாடுகள். ஐ. நா விலும் விசேஷ முக்கியத்துவமிக்க பாத்திரத்தை வகிக்கின்றன.

சர்வதேச உறவுகளில் கூட்டுச்சேரா இயக்கம் கொண்டுள்ள பாத்திரம் தனிச் சிறப்புமிக்கது இரண்டு உலக சமூக அமைப்புக்களின் மோதுதல் ஏகாதிபத்திய அமைப்பு சீர்குலைந்தது போன்ற சர்வதேச நிகழ்வுகள் கூட்டுச்சேரா இயக்கத்தின் தோற்றத்தைக்கணிசமான அளவு உறுதிப் படுத்தின. இந்த இயக்கம் நடுநிலைமை, எந்த வொரு ராணுவ அணியிலும் பங்குபற்றாதிருக்கும் கருத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. சில கூட்டுச்சேரா நாடுகள், இக்கருத்தை, இரு உலக அமைப்புக்களிலிருந்து தாம் சம அளவில் தூரநிற்பது என்று அர்த்தப்படுதின; ''மூன்றாவது வழி''க் கோட்பாடு என்று கூட அவை இதை எடுத்துக் கொண்டன.



இதற்கு, தமது சுதந்திரக் கோட்பாடு கெடுபிடியுத்தத்தினால் பாதிப்புற்ற காலத்தில் தான் பல சுதந்திர ஆசிய நாடுகள் உருவாகின என்பதே காரணம் ஆனால்கூட்டுச்சேரா இயக்கம் தனது அடிநாள் தொட்டே ஏகாதிபத்திய—விரோதப் பண்பைக் கொண்டிருந்து வருகிறது என்பதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

## வளர்ச்சியின் இயக்க ஆற்றல்

ஆசியா. ஆபிரிக்கா, லத்தினமெரிக்காவில் ஏற்பட்ட மாற்றங்களின் பிரதான அம்சமென்ன வெனில், அவற்றின் வளர்ச்சியினது இயக்க ஆற்றலே அரசியல் சுதந்திரமடைந்த விமோசன நாடுகள், பொருளாதார சுதந்திரத்திற்காகவும் புதியஉலகப் பொருளாதார ஒழுங்கினை ஸ்தாபிப்பதற்காவும் இன்று கூட்டாக உழைக்கின்றன. இந்நடவடிக்கைகள் வளர்முக நாடுகளுக்கும் முதலாளித்துவ நாடுகளுக்கு மிடையிலான பிணைப்புக்களை குறிப்பிடத்தக்க அளவில் மாற்றின; இன்றைய சர்வதேச உறவுகளமைப்பில் பிமோசனமடைந்த நாடுகள் சுதந்திரமாக இயங்குவதை உயர்த்தின.

இதற்கு உதாரணமாக பல சுதந்திர நாடுகளின் ஏகாதிபத்திய—விரேத, ராணுவவாத—விரோத நடவடிக்கைகளையும், சமாதானம், ஆயுதப் பரிகாரணத்துக்கான போராட்டத்தின் வளர்ச்சியையும் குறிப்பிடலாம். பல வளர்முக நாடுகள் சோஷலிஸப் பாதையைத் தேர்ந்தெடுத்தன.

சோஷலிஸ மார்க்கத்தை மேற் கொண்ட நாடுகள் சுரண்டல் உறவுகளை அழித்தொழித்து விட்டு அரசியல், பொருளாதார வாழ்வை ஜனநாயகப் படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டன. உழைக்கும் வர்க்கத்திற்கும் விவசாயிகளுக்குமிடையிலான கூட்டணி வலுப்பெற்று விஞ்ஞான சோஷலிஸக் கருத்துக்களினால் வழிநடாத்தப்படும் முன்னணிப்படைக் கட்சிகள் உருவாகின.

முதலாளித்துவம் ஒருசமுதாய அமைப்பு என்பதைநிராகரித்த சோஷலிஸத்திசைவழியை மேற்கொள்ளும் நாடுகள், தமதுமுதலாளித்துவ உறவுகளைக் கட்டுப்படுத்தியும் சோஷலிஸத்துக்கான மாற்றத்தைத் தமது இறுதி இலக்காக அமைத்தன இந்நாடுகள் பலவற்றிலேற்பட்ட புரட்சீகரமான மாற்றங்களும் சோஷலிஸ நாடுகளுடனான பல்திறப்பட்ட தொடர்புகளும் இந்நாடுகளில் ஏகாதிபத்திபத்தின்

செல்வாக்கைக் குறைத்ததுடன், சோஷலிஸத்துக்கும் சமுதாயமுன்னேற்றத்திற்கும் சாதகமாகசக்திகளின்சமநிலையை மாற்றியமைத்தன.

## ஒருமைப்பாடின் அடித்தளத்தில்

நமது காலத்தின் இதரபுரட்சிகர சக்திகளுடன் தேசிய விமோசன இயக்கம் அணிசேர்வதானது இன்று ஆரம்ப நிலையிலுள்ளது. இந்த அணியில்லாது, முதலாளித்துவ மற்ற வளர்ச்சிக்கான மாற்றம் சாத்திய மற்றதே. இன்றைய சர்வதேச நிலைமையில் வளர்முக நாடுகள் சோஷலிஸ நாடுகளுடன் மேன்மேலும் பிணைப்புக்களை ஏற்படுத்திவருகின்றன.

ஆனால், வளர்ந்து வரும் சர்வதேச ஒருமைப்பாட்டிற்கும் அதற்கு அடித்தளமாகவுள்ள ஏகாதிபத்திய—விரோத சக்திகளுக்கும் எதிராகவுள்ள பிற்போக்கு வட்டாரங்கள் தமது நடவடிக்கைகளை அதிகரித்துள்ளன. முதலாளித்துவப் பாதையைப் பின்பற்றும் வளர்முக நாடுகளின் அரசாங்கங்கள் சோஷலிஸத்துக்கும் சோஷலிஸ சமூகத்திற்கும் எதிரானவை. அவை சோஷலிஸ, முதலாளித்துவ நாடுகளை ஒன்றாக வைக்கும் ''இரு மகாவல்லரசுகள்'', ''ஏழை பணக்கார நாடுகள்'' என்ற கோட்பாடுகளைப் பிரபல்யப்படுத்துகின்றன, இக் கோட்பாடுகளும் தத்துவங்களும், சோஷலிஸ்ட் சமாஜத்துக்கும் வளர்முக நாடுகளுக்கிடையில் ஆப்புவைப்பதையும் ஏகாதிபத்திய—விரோத முன்னணியைப் பிளவுபடுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு பூர்ஷுவா சித்தாந்தவாதிகளால் உருவாக்கப்பட்டவை.

ஏகாதிபத்திய, நவ-கலோனியலிஸ சக்திகளது எதிர்ப்புரட்சி நடவடிக்கைகள், வளர்முக நாடுகளின் மக்களது உறுதியைக் குலைப்பதில் தோல்வியடைந்து விட்டன; அவர்கள் தொடர்ந்தும் சோஷலிஸ நாடுகளுடன் தமது உறவுகளைப் பலப்படுத்தி வருகிறார்கள் என்பதை இங்கு வலியுறுத்திக் கூறுவதவசியம். உலக சோஷலிஸத்துடனான ஆகிய, ஆபிரிக்க லத்தினமெரிக்க மக்களது உறுதியான கூட்டணி மூலமே அவர்களால் காலனியாதிக்கத்தைத் தகர்க்கவும், தேசிய சுதந்திரத்தை வென்றெடுக்கவும் முடிந்தது. அவர்களுடைய தேசிய மறுமலர்ச்சிக்கான போராட்டத்தில் வெற்றியடைய உதவியதும் இக்கூட்டணியே.

புதிய உலக பொருளாதார ஒழுங்கை ஸ்தாபிப்பதில், ஏகாதிபத்திய வல்லரசுகளுக் கெதிரான நடவடிக்கைகளை வளர்முக நாடுகள் எடுப்பதற்கு சோவியத் யூனியனினதும் சோஷலிஸ நாடுகளதும் ஆதரவு உதவியாயமைந்தது.



உலகில் ஏற்பட்ட மாற்றங்கள், சக்திகளின் புதிய சமநிலை, வளர்முக நாடுகளுக்கு திட்டவட்டமான விட்டுக்கொடுப்புக்களை அளிக்கவேண்டிய நிர்ப்பந்தத்தை ஏகாதிபத்தியத்திற்கேற்படுத்தின. ''ஒபெக்'' நாடுகள் எண்ணெய் வினியோகம், விலை ஆகியவற்றிலான தமது புதிய நிபந்தனைகளை ஏகாதிபத்திய ஏகபோகங்கள் ஏற்க வேண்டுமென கட்டாயப்படுத்தின. ''ஒபெக்''கின் நடவடிக்கைகள், வளர்முக நாடுகளது ஏகாதிபத்திய விரோத போராட்டத்தை மேலும் உயர்த்திவிட்டன. ஏகாதிபத்திய சுரண்டலமைப்பின் நெருக்கடிகளை மேலும் உக்கிரப்படுத்தின. தேசிய மூலவளங்கள் ஏற்றுமதித் தொழில் துறையில் அந்நிய கட்டுப்பாட்டை அழித்தொழித்தன,

மிகக் கேடுகெட்ட, கலோனியல் முறையிலான சுரண்டலுக் கெதிரான போராட்டத்தில் வளர்முக நாடுகள் இன்று அடைந்துள்ள வெற்றிகள் மாபெரும் சாதனைகளாக, மிக நீண்டதும், சிரமமானதுமான பாதையின் ஆரம்பமாகவும் கருதப்படுகின்றன. இப்பாதையில் மேலும் திடசித்தத்துடன் முன்னேற நேரடியானதும் மறைமுகமானதுமான ஏகாதிபத்திய சுரண்டலின் சகல முறைகளையும் இடைவிடாது, உறுதியுடன் வளர்முகநாடுகள் அழித்தொழிக்க வேண்டும்.

**மஸ்துனரோட்நாயா ஷிஸ்ன் இல 1, 1979.**

**வரலாறும் அனுபவமும்**

சற் அப்றஸ்யென்,
விஞ்ஞான அபேட்சகர் (தத்தவம்)

# கட்சியும் இளைஞர்களும்

## (பிரச்னைக்கான லெனினின் அணுகுமுறை)

**சோ.** க: க.வின் 25வது காங்கிரஸ் காலத்தில் கட்சியில் 15,694,000 அங்கத்தவர்கள் இருந்தார்கள். இது தொடர்ந்து வளர்ந்து சென்று இப்போது அங்கத்தவர் தொகை 165 லட்சத்திற்குமேலாக அதிகரித்துள்ளது. ''கட்சியின் புதிய உறுப்பினர்களில் பெரும்பான்மையானோர் அல்லது மூன்றில் இரண்டு பங்கிற்கும் அதிகமானோர் கம்யூனிஸ்ட் வாலிபர் சங்கங்களிலிருந்து வந்தவர்களே'' என்று சோ. க. க. மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளர் எல். ஐ. பிரஷ்னேவ் கூறியுள்ளார்.

இளைஞர்களிடையே கட்சி வேலையைப் பற்றிய லெனினுடைய கொள்கைகளின் தொடர்ச்சியான வழிகாட்டலின் கீழ் சோ. க. க.வின் தளர்ச்சியுருத பணிகளின் விளைவாகவே இந்தக் கூற்றுப் பிறந்துள்ளது. இந்தக் கொள்கைகளெல்லாம் என்ன?

### புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக்கொள்வது பற்றிய கொள்கைகள்

புரட்சிகரச் செயற்பாடுகளின் மிக ஆரம்பகாலத்திலேயே விடுதலைப் போராட்டத்தில் இளைஞர்களின் பங்கினை வி. ஐ. லெனின் வெகுவாக வற்புறுத்தினார். அத்துடன் சகல உழைக்கும் மக்கள் மத்தியிலும் வாலிபர்கள், யுவதிகள் ஆகியோரே கட்சிக்கான புதிய படையின் நம்பகமான சக்திகள் என்பதனை அவர் கண்டுகொண்டார். உலகில் அடக்குமுறை நிலைத்திருக்கும் வரைக்கும் புரட்சிகரப் போராட்டத்திற்கான புதிய போராளிகள் தோன்றியவாறேயிருப்பார்களென அவர் நம்பினார், ஆனால் அவர்கள் எவ்வளவு விரைவாக உருவாகமுடியுமென்பதும், எவ்வளவு தூரம் போராட்டத்திற்குத் தம்மைத் தயார்படுத்திக்கொள்ள முடியுமென்பதும் கட்சியின் நிர்வாகத் திறனிலும், அரசியல் நடவடிக்கைகளிலுமே பெரிதும்



தங்கியுள்ளது. போராட்டத்திற்குத் தயாரான மக்கள் மிகப் பெருமளவில் காணப்படுவது வெகு அபூர்வம். இதனாற்தான் லெனின் கட்சிக்குப் புதிய அங்கத்தவர்களைச் சேர்த்துக்கொள்வதற்கான புரட்சிகர வேலைத்திட்டமொன்றினை கம்யூனிஸ்டுக்கள் நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியம் பற்றிக் கூறியுள்ளார். இளைஞர்கள் மீது அவநம்பிக்கை கொண்ட கட்சியின் செயற்படும் உறுப்பினர்கள் சிலரை அவர் வன்மையாக எதிர்த்து அவ்வணுகுமுறைக்கு எதிராகப் போராட வருமாறு கம்யூனிஸ்டுகளுக்கு அழைப்பு விடுத்தார்.

அதே நேரத்தில் கட்சியினை ஸ்திரப்படுத்துவதில் வர்க்க அணுகுமுறைகள் கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்பதை லெனின் வற்புறுத்தினார், அத்துடன் சந்தர்ப்பவாதிகளின் முயற்சிகளைத் தடுக்குமுகமாக சகலரும் கட்சியில் சேரத்தக்க முறையில் கட்சியின் கதவுகள் யாவருக்கும் திறந்திருக்கும் செயற்பாட்டினை அவர் வன்மையாக எதிர்த்தார். முதலாவது ரஷ்யப் புரட்சியின் போது, 1905ல் கட்சிக்காக பரவலாக இளைஞர்களைத் திரட்டும் பணியில் தான் ஈடுபட்டிருந்தபோதுகூட இந்த அணுகுமுறையினையே அவர் கடைப்பிடித்தார்.

ஏகபோகம். முதலாளித்துவம் என்பவற்றிற் கெதிரான போராட்டத்தினைத் தலைமையேற்று நடாத்திச் செல்லத்தகுந்த முன்னேற்றமடைந்த இளைஞர் படையொன்று கட்சியில் காணப்பட்டது, அவர்கள் கட்சியின் கொள்கைகளுக்கு ஒந்த கருத்துடையவர்களாகி அதிற் சேர்ந்திருந்தார்கள். இதுதான் 1906ல் லெனின் பின்வருமாறு கூறுவதற்குத் தளமமைத்துக் கொடுத்தது: ''எமது கட்சியில், புரட்சித் தன்மைமிக்க எமது கட்சியில் இளைஞர்கள் முக்கிய பங்குவகிப்பது இயல்பானதாக இருக்கின்றதல்லவா? நாங்கள்தான் எதிர்காலத்தின் கட்சி, அத்துடன் எதிர்காலம் இளைஞர்களுக்குரியது. நாங்கள் புதுமைவிரும்பிகளின் ஒரு கட்சி, அத்துடன் புதுமைவிரும்பிகளை மிக்கவிருப்புடன் பின்பற்றுபவர்கள் இளைஞர்கள்தான். பழைய சிதைவுகளுக் கெதிரான போராட்டத்தில் தம்மையே அர்ப்பணஞ் செய்துகொள்பவர்களின் கட்சியினர் நாங்கள், அத்துடன் தம்மை அர்ப்பணஞ் செய்துகொள்ளும் போராட்டத்தில் எப்பொழுதும் முன்னிற்பவர்கள் இளைஞர்கள்தான்.''[1]

கட்சியினைக் கட்டியெழுப்பிய முதிர்ந்த தோழர்களின் கரங்களுடன் கரங்கோர்த்து இளந்தோழர்கள் வேலைசெய்

---

1 வி. ஐ. லெனின், திரட்டு நூல்கள் பா. 11 ப. 354.

வதன்மூலம் மட்டுமே கட்சியின் உட்பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முடியும், புரட்சிக்குத் தயார்படுத்துவதற்காக கடினமான சோதனைகளைத் தாண்ட முடியும், தோல்வியின் கசப்பிலிருந்தும், வெற்றியின் களிப்பிலிருந்தும் பாடங்கள் கற்கமுடியும். முதிர்ந்த தோழர்களின் அனுபவங்களிலிருந்து புரட்சிகரக் கட்சியின் கடமைகள் எவ்வாறு ஆற்றப்பட வேண்டுமென்பதற்கான உதாரணத்தை லெனின் கண்டுகொண்டார்.

## சிக்கல்களாலேற்படும் பரீட்சார்த்தச் செயற்பாடுகள்

கட்சியின் போராட்டத்தின் கடினமான சோதனைக் காலத்தில் இளைஞர்களின் பலத்தினை ஸ்திரப்படுத்துவதில் லெனின் விசேஷ கவனம் செலுத்தினார். 1905 ரஷ்ய பூர்ஷுவா—ஜனநாயகப் புரட்சியின்போதும், அதற்குப் பின்னர் கிளர்ச்சிக் காலத்திலும் இதுதான் நடைபெற்றது. சோவியத் ஆட்சிக் காலத்தில் உள்நாட்டு யுத்த காலத்திலும், அந்நிய ஆக்கிரமிப்புக் காலத்திலும் (1918-1920) இதுதான் நடைபெற்றது. 1918 ஆகஸ்டில், மாஸ்கோ கட்சிக் குழுவின் அமர்வொன்றில் பேசும்போது, கட்சியில் இளைஞர்கள் வகிக்கும் பாத்திரத்தின் விஷேச தன்மையினை லெனின் வற்புறுத்தினார். ''...பழைய படைகள் அகற்றப்பட்டு அவ்விடங்களுக்கு புதிய படைகள்- இளைஞர் படைகள் நிச்சயமாகப் புகுத்தப்படல் வேண்டும்.''2 இளந்தொழிலாளர்கள் கட்சியில் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டியதன் அவசியத்தினையே அவர் இவ்வாறு கூறினார்.

சிக்கல்மிகுந்த சோதனைகாலத்தில் உழைக்கும் மக்களுக்கான விடுதலைப் போராட்டத்தில் தம்மை அர்ப்பணிக்கத்துணிந்த மக்கள் மட்டுமே கட்சியில் சேர்ந்தார்கள். 1919-நவம்பர் 7ந் திகதி லெனின் கூறியவற்றிற்கு இச்செயற்பாடு விசேஷ அர்த்தத்தைக் கற்பிக்கிறது: ''எம்மிடையே பத்து, நூறு, ஆயிரக்கணக்கான உழைக்கும் வர்க்க, விவசாய இளைஞர்கள் இருப்பதனை நாம் நன்கு அறிவோம்... எமது சிக்கலான காலகட்டத்தில் இவர்களிள் எண்ணிக்கை அதிகரித்துச்செல்கிறது, இவர்கள் புரியும் தியாகங்களோ கடினமானவையாக இருக்கின்றன. இந்த ஒதுக்கங்கள் நமக்கு நம்பிக்கையை ஊட்டுகின்றன, இந்த இரண்டாண்டுக் காலத்தில் நாம் நிலையான, உறுதியான நிலையொன்றினை அடைந்துள்ளோம்.''3

———

2 வி. ஐ. லெனின், திரட்டு நூல்கள், பா. 28, ப. 60.
3 வி.ஐ.லெனின், திரட்டு நூல்கள், பா.30, பக் 133.



புதிய சமுதாயமொன்றினைக் கட்டியெழுப்பவதற்கான செயற்பாட்டிலிருந்து பெருந்தொகையான உழைக்கும் மக்களின் சமூக-அரசியல் நடவடிக்கைகளையும், அரசின் வாழ்க்கையினையும் வேறுபடுத்தமுடியாத தன்மையிலேயே கட்சியின் ஸ்திரநிலை தங்கியுள்ளதென்பதனை லெனின் சுட்டிக்காட்டியுள்ளார். உழைப்பாளிகள், விவசாயிகள் ஆகியோரிடையே தலையாய பதவிகளை வகிக்கக்கூடிய, நிர்வாகத் திறமைவாய்ந்த மக்கள் பலர் இருப்பதனை அவர் உறுதியாக நம்பினார். அதிகரித்துவரும் இந்த எண்ணிக்கை சோஷலிஸ நிர்மாணத்திற்கு வழிகாட்டுமென்பதையும் அவர் உறுதியாக நம்பினார்.

மேலும் இளைஞர்களைக் சேர்த்துக் கொள்ளுமாறும், சகலவிதமான நிர்வாகப் பதவிகளையும் அவர்களுக்கு வழங்குமாறும், மிகவிரைவில் நடைமுறைப் பரீட்சைகளுக்கு அவர்களை உட்படுத்துமாறும் கட்சி அமைப்புக்களை லெனின் கேட்டுக் கொண்டார். இதன் கருத்து மிக்க பொறுப்பும், மதிநுட்பமும் வாய்ந்த பதவிகளை புதியவர்களுக்கு உடனடியாக வழங்குவதென்பதல்ல, பதிலாக புதிதாக வருபவர்கள் தமது திறமைகளை வெளிப்படுத்துவதற்கான உடனடிச் சந்தர்ப்பங்களை நடைமுறையில் ஆக்கிக் கொடுப்பதேயாகும்.

1910-ம் ஆண்டில் லெனின் பின்வரும் வார்த்தைகளை உபயோகித்தார்: ஒருவர் உண்மையான கட்சி அங்கத்தவரென்பதற்கு, அவர் அவ்வாறு அழைக்கப்படுதல் மட்டும் போதாது. ''(4) இதன் கருத்து என்னவென்பதனை அவர் விபரிக்கிறார். ஒரு கட்சி உறுப்பினன் கட்சியின் வேலைத்திட்டத்திற்கு அயைவாக கட்சி உணர்வுடன் பிரசாரவேலைகளை நடாத்த வேண்டும், கட்சியின் தந்ரோபாய தீர்மானங்களுக்கு அமைவாக சகல நடைமுறைவேலைகளையும் நடாத்த வேண்டும், கட்சிக் கொள்கைகளுக்கேற்ப நிறுவனத்தைக் கட்டிவளர்ப்பதற்கு உண்மையான உதவிகளைச் செய்தல் வேண்டும். புரட்சிகர வர்க்கமொன்றின் கட்சிக்கு சோஷலிஸத்தின் மீதும், உழைக்கும் வர்க்க அரசின்மீதும் நம்பிக்கையுள்ள, உயர்ந்தமட்ட உணர்வுபூர்வமான, உண்மையான தன்னலமற்ற வேலைசெய்வதில் உதாரணமான ஆதரவாளர்கள் வேண்டும். இது குறிப்பாக புதிய கட்சி அங்கத்தவர்களுக்கு, தத்தமது அமைப்புக்களில் ''கட்சிப்பாடசாலைக் கல்வியினை'' கற்கவேண்டிய இளம் அங்கத்தவர்களுக்கு லெனின் கூறியது போன்று புரட்சிகரப் போராட்ட அனுபவங்களினால் உருக்கேற்றப்பட்டு படிப்பினைகளைப்பெற்ற, உணர்வுபூர்வமாக தம்மை அர்ப்பணஞ்செய்துகொண்ட கம்யூனிஸ்டுக்களினால் வழிகாட்டப்படவேண்டிய புதிய அங்கத்தவர்களுக்குப் பொருத்தமானது.

———

(4) வி.ஐ. லெனின், திரட்டு நூல்கள், பா:17, பக். 221

இளைஞர்களைக் கட்சியில் சேர்ப்பதுபற்றிய தனது கருத்துக்களை லெனின் விபரித்துப் பல தசாப்தங்கள் கடந்துவிட்டன. கட்சிக்கான பிரதேசத்தின்போது வர்க்க அணுகுமுறைகளைக் கடுமையாகக் கடைப்பிடித்தல்; அதில் சேர்வதற்கு உயர் விருப்பினையும், முழு நம்பிக்கையையும் கொண்டிருத்தல்; கட்சியில் சேர்வதற்குத் தயார்நிலையிலுள்ள இளைஞனொருவனின் தனிப்பட்ட பொறுப்புணர்ச்சியும் அவனுக்கு வழங்கப்படும் உதவியும் ஆதரவும்; இளம் கம்யூனிஸ்டுகளுக்கு கல்வி போதிப்பதில் அனுபவம்வாய்ந்த முதிர்ந்த கம்யூனிஸ்டுக்களினதும், கட்சி அமைப்பினதும் பங்கு—லெனினுடைய இந்தக் கொள்கைள் கட்சியில் இளைஞர்களைச் சேர்ப்பது, கம்யூனிஸ்டுக்களின் பரம்பரையின் இடையுருத் தொடர்ச்சி, அவற்றின் தரமான வளர்ச்சி என்பவற்றில் இன்றும்கூட விலைமதிக்கமுடியாத பொக்கிஷங்களாயிருக்கின்றன.

சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்டுட்கட்சி இந்த விடயங்களில் தொடர்ச்சியான கவனஞ்செலுத்துவதிலும் இளம் அங்கத்தவர்களைச் சேர்ப்பதன் மூலம் கட்சியை விரிவுபடுத்தி, பலப்படுத்துவதில் லெனினுடைய கொள்கைகளை உறுதியாகக் கடைப்பிடிப்பதிலும் தன்னை அர்ப்பணித்துள்ளது.

மொலோடி கம்யூனிஸ்ட், இல 1,1979

எட்வேர்ட் ரடவொஸியான்

# ஒன்றியக் குடியரசு பூரண இறைமையுள்ள ஒரு ராஜ்யம்

> சோவியத் நாட்டின் முழுப்பெயர் சோவியத் சோஷலிஸ குடியரசுகளின் ஒன்றியம் என்பதாகும். இந்த ஒன்றியம் ஒன்றியக் குடியரசுகளின் சுயாதிபத்திய உரிமைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலமல்ல, மாருக இவற்றை விரிவுபடுத்துவதன் மூலமும் இவை உத்தரவாதப்படுத்தப்படுவதன் மூலமுமே வலுப்படுத்தப்படுகிறது.

**சோ**வியத் ஒன்றியத்தின் குணம்சங்களுள் ஒன்று சோ.சோ.கு.ஒ.வின் சுயாதிபத்தியமும் ஒன்றியக் குடியரசுகளின் சுயாதிபத்தியமும் ஒத்திசைவாக இணைக்கப்படுவதாகும். சோவியத் சமஷ்டியின் 1 சோஷலிஸ, சர்வதேசிய இயல்பே இதற்கான மெய்யான வாய்ப்பினை வழங்கியது. சோ.க.க.வின் லெனினிய தேசியக் கொள்கை இந்த

1. சோவியத் சமஷ்டி—தமது இறைமையையும் சுதந்திரத்தையும் பேணும் ராஜ்யங்களின் ஒரு இணைப்பாகும். ஒரே ஒன்றியகுடியுரிமை, ஒன்றியராணுவம், நாணய அமைப்பு ஆகியவற்ருல் இது சிறப்பம்சம் பெறுகிறது. சோவியத் சமஷ்டி இருவடிவங்களில் வெளிப்பாடு பெறுகிறது. ஒன்று சோ.சோ.கு.ஒ. மற்றது ஒன்றியக் குடியரசும், சுயாட்சிக் குடியரசுகளையும், பிரதேசங்களையும் பிராந்தியங்களையும் இணைந்த சமஷ்டியுமாகும். சோவியத் சமஷ்டி இஷ்டபூர்வமான ஒரு இணைப்பாகும். சமத்துவம், பரஸ்பர மதிப்பு, ஜனநாயக ஒத்துழைப்பு ஆகியன இதன் அடிப்படையாகும்.

வாய்ப்பை யதார்த்தமாக்கியது. சோவியத் சோஷலிஸக் குடியரசுகளின் ஒன்றியம் உருவாக்கப்பட்டபோது ஒன்றிய ராஜ்ய உருவாக்கங்கள் ஏற்கனவே உருவாகிவிட்டன. ஐக்கியத்தின் வெற்றிக்கு முழுமையான பங்களிப்பைச் செய்யக் கூடிய வகையில் அனைத்து ஒன்றிய அமைப்புகளின் உரிமைகளுக்கிடையில் நல்ல உறவுகள் நிலவின. சோவியத் குடியரசுகள் ஒரு புதிய சமஷ்டியில் இணைக்கப்பட்டதினால் சமஷ்டி அமைப்புகளுக்கும் ஒன்றிய குடியரசு அமைப்புகளுக்குமிடையில் உரிமைகளை புனர் அமைப்பதை அவசியமாக்கியது.

## முக்கியமான உத்தரவாதம்

சோ.சோ.கு. ஒன்றிய அரசியல் யாப்பு அளித்துள்ள வரையறுப்பின்படி ஒரு ஒன்றியக் குடியரசானது இறைமையுள்ள சோவியத் சோஷலிஸக் குடியரசாகும். சோ.சோ.கு.ஒ. அரசியல் யாப்புக்கு ஏற்றதான, குடியரசின் பிரத்தியேக நிலைமைகளை கவனத்திற் கொண்ட தனது சொந்த அரசியல் யாப்பை ஒன்றிய குடியரசு கொண்டுள்ளது. ஒரு ஒன்றிய குடியரசு தனது சொந்த சுப்ரீம் சோவியத்தையும், அமைச்சரவையும், ராஜ்ய அதிகாரத்தினதும் நிர்வாகத்தினதும் உயர் உறுப்புக்களையும் கொண்டுள்ளது. ஒரு ஒன்றிய குடியரசின் பிரதேச எல்லைகள் அதன் சம்மதமில்லாது மாற்றமுடியாது. ஒரு ஒன்றிய குடியரசு தனது நிர்வாக—பிராந்திய கட்டமைப்புடன் சம்பந்தப்பட்ட பிரச்னைகளைத் தானே நிர்ணயிக்கிறது. பிற ராஜ்யங்களுடன் உறவுகளைப் பேணவும், அவற்றுடன் ஒப்பந்தங்களைச் செய்து கொள்ளவும், ராஜதந்திரப் பிரதிநிதிகளைப் பரிமாறிக் கொள்ளவும், சர்வதேச ஸ்தாபனங்களின் பணிகளில் பங்கு கொள்ளவும்அதற்கு உரிமை உண்டு. சோ.சோ.கு.ஒ. விலிருந்து சுதந்திரமாகப் பிரிந்து செல்லும் உரிமை ஒவ்வொரு ஒன்றியக் குடியரசுக்கும் உள்ளது.

சோவியத் ஒன்றியத்தின் இறைமையும் ஒன்றியக் குடியரசுகளின் இறைமையும் ஒன்றிணைவதை சோவியத் சமுதாயத்தின் ஒரே சமூக, அரசியல், பொருளாதார அமைப்பும், அனைத்து மக்களினது நலன்களின் ஒத்த தன்மையும் இலகுவானதாக்குகின்றன. ஒன்றியக் குடியரசுகளின் இறைமை உரிமைகளை சோ.சோ.கு.ஒ. அரசியல் யாப்பின் 81 வது விதி உத்தரவாதப் படுத்துகிறது. ஒன்றிய குடியரசுகளும் முழு சோவியத் மக்களினதும் சமூக-சர்வதேசிய ஒற்றுமையை வலுப்படுத்தவும் சோஷலிஸ ஜனநாயகத்தை வளர்க்கவும் தமது பங்களிப்பைச் செய்கின்றன.



## உரிமைகள் வியாபிதம்

புதிய சோவியத் அரசியல் யாப்பு(1977)ஒன்றிய குடியரசுகளின் உரிமைகளை மேலும் விரிவுபடுத்தியுள்ளது. இந்த உரிமைகள் உத்தரவாதப்படுத்தப்படுவதை மேலும் உறுதிப்படுத்தியுள்ளது.

முதலாவதாக; சோ.சோ.கு.ஒ.வின் சுப்ரீம் சோவியத்தில் சட்டவாக்க முன்முயற்சியை மேற்கொள்வதற்கான உரிமை யூனியன் குடியரசுகளுககு வழங்கப்பட்டுள்ளது.

இரண்டாவதாக; சோவியத் சோஷலிஸக் குடியரசுகள் ஒன்றியத்தின் ஆட்சி அதிகாரத்திற்குட்பட்ட விஷயங்களில் முடிவெடுப்பதில் ஒன்றியக் குடியரசுகள் பங்கு பற்றும் உரிமை புதிய அரசியல் யாப்பில் வழங்கப்பட்டுள்ளமை விசேஷ முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அனைத்து ஒன்றிய ராஜ்ய அதிகார—நிர்வாக உறுப்புகளின் கட்டமைவும் செயல்பாடும் இந்த உரிமையை உத்தரவாதப்படுத்துகிறது. சோ.சோ.கு.ஒ. சுப்ரீம் சோவியத்தின் இரு சபைகளான யூனியன் சோவியத்தும், தேசிய இன சோவியத்தும் சம உரிமைகளைக் கொண்டவை. இது அனைத்து சோவியத் மக்களின் நலன்களையும், அதே போல ஒன்றிய குடியரசுகளின் மக்களினதும் நலன்களையும் உத்தரவாதப்படுத்துகிறது. ஒன்றியக் குடியரசுகளின் மக்கள் ஜனத்தொகை விகிதாசாரப்படி யூனியன் சோவியத்துக்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கிறார்கள். தேசிய இன சோவியத்தின் ஒன்றியக் குடியரசுகள் பிரதேச—ஜனத்தொகை வித்தியாசமின்றி தலா 32 பிரதிநிதிகளை கொண்டுள்ளன. சோ.சோ.கு.ஒ. அரசியல் யாப்பின் கீழ் யூனியன் சோவியத்தும் தேசிய இன சோவியத்தும் சம அளவு பிரதிநிதிகளை கொண்டுள்ளன.

மற்றும் அனைத்து ஒன்றிய அமைப்புகளும் ஒன்றிய குடியரசுகளின் பல பிரதிநிதிகளைக் கொண்டுள்ளன. சோ.சோ.கு.ஒ. சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவின் 15 உப தலைவர்களும் ஒவ்வொரு குடியரசிலிருந்தும் தெரிவு செய்யப்படுவர்களாகும். ஒன்றிய குடியரசுகளின் அமைச்சரவைத் தலைவர்கள் சோ.சோ.கு.ஒ. அமைச்சரவையின் பதவிமுறைப்பட்ட உறுப்பினராவர். அதே போல ஒன்றிய குடியரசு சுப்ரீம் நீதிமன்றங்களின் தலைவர்கள் சோ.சே.கு.ஒ.சுப்ரீம் நீதிமன்றத்தின் பதவிமுறைப்பட்ட உறுப்பினர்களாவர்.

மூன்றாவதாக; 1977 ஆம் வருட அரசியல் யாப்பு ஒவ்வொரு ஒன்றிய குடியரசும் தனது பிரதேசத்தில் பொருளாதார—சமூக அபிவிருத்தியை உத்தரவாதப் படுத்

தும் என்றும், சோ.சோ.கு.ஒ.வின் அதிகாரத்தை அமுல் படுத்த உதவி செய்யும் என்றும், சோ.சோ.கு.ஒ. உயர் ராஜ்ய அமைப்புகளின் முடிவுகளை செயல்படுத்தும் என் றும் கூறுகிறது.

தனது ஆட்சியதிகாரத்தின் கீழ் வரும் விவகாரங்க ளில், ஒன்றிய குடியரசு தொழிலகங்களினதும், நிறுவனங் களினதும், ஸ்தாபனங்களினதும் நடவடிக்கைகளை ஒன்றி ணைக்கும், கட்டுப்படுத்தும்.

நான்காவதாக; நகல் சட்டங்கள் பற்றியும், ராஜ்ய வாழ்வின் முக்கிய பிரச்னைகள் பற்றியும் தேசிய வியாபக மான விவாதங்களை நடத்துமாறு யூனியன் குடியரசுகள் சோ.சோ.கு.ஒ. சுப்ரீம் சோவியத்தையும், அதன் தலை மைக் குழுவையும் கேட்கலாம்.

ஐந்தாவதாக; யூனியன் குடியரசுகளினதும் அவற் றின் அதிகார உறுப்புக்களினதும் அதிகாரங்களையும் சோ. சோ.கு.ஒ.வினதும் அதன் அதிகார உறுப்புக்களினதும் அதிகாரங்களையும் வரையறை செய்யும் அரசியல் யாப்பின் விதிகள் ஒன்றிய குடியரசுகளின் உரிமைகள் விரிவுபடுத்தப் பட்டுள்ளதை எடுத்துக்காட்டுகின்றன. தேசிய, ஸ்தல நிலைமைகள் பற்றிய நேரடியான பரிச்சயமின்றி, ஒரு மத் திய நிலையத்திலிருந்து தீர்க்கப்படமுடியாத பணிகளில் கவனம் செலுத்த குடியரசு—ஸ்தல அமைப்புகளுக்கு கூடுதல் வாய்ப்பை புதிய அரசியல் யாப்பு அளிக்கிறது.

## அனைத்து ஒற்றிய, தேசிய ராஜ்யத்துவ ஐக்கியம்

நாடு முழுவதிலும் ஒரே வித சட்டங்கள் அமுலிலிருப் பதை உத்தரவாதப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அர சியல் யாப்பு அங்கீகரித்துள்ளது. இது எவ்வாறு சாதிக்கப் படுகிறது?

சட்டவாக்கத்துறையில், குறிப்பாக சோவியத் ஒன்றி யத்தினதும் ஒன்றியக் குடியரசுகளினதும் அடிப்படைச் சட்டங்களை உருவாக்குவதில் சோ. சோ.கு.ஒ. சுப்ரீம் சோவியத் கடந்த 10 ஆண்டுகளில் முனைப்பாகவும் பய னுர் முறையிலும் செயலாற்றியுள்ளது. ஒன்றியக் குடியர சுகளின் சுப்ரீம் சோவியத்துக்களின் சட்ட முன் முயற்சி களை கட்டுப்படுத்தவோ மட்டுப்படுத்தவோ இல்லை— மாறாக மேலும் உற்சாகப்படுத்தியுள்ளது. இந்தக் காலப் பகுதியில் யூனியன் குடியரசுகளின் சட்டவாக்கங்கள் செம் மைப்படுத்தப்பட்டன.



ஒன்றிய குடியரசின் ஆட்சி அதிகாரம் சில துறைக ளில் விரிவுபடுத்தப்படுவதுடன் குடியரசு ராஜ்யத்துவத் தின் பாத்திரம் மேலும் வலுப்படுத்தப்படுகிறது. ஒன்றிய குடியரசு நிர்வாகமுறை அனைத்து ஒன்றியத்திற்கும், ஒன் றியக் குடியரசுகளுக்குமிடையில் சரியான உறவுகளை ஸ்தா பித்துள்ளது. பொருளாதார—சமூக வாழ்வில் தேசிய—சர் வதேசிய கோட்பாடுகளை இது அடிநிலையாகக் கொண்டுள் ளது. ஒன்றிய குடியரசுகளின் இணைப்பு ஆட்சி அதிகா ரம் சோஷலிஸ நிர்மாணத்தில் மேலும் வளர்ச்சியடைகி றது. அனைத்து ஒன்றிய—தேசிய ராஜ்யத்துவ ஒற்றுமை வலுப்படுத்துவதற்கான இன்னுமொரு வெளிப்பாடு இது.

**சோவியத் சமுதாயம் வாழ்வும் பிரச்னைகளும்**

# சோ.க.க. உறுப்பினராக இருக்கயாருக்குத் தகுதி உண்டு?

> சோ.க.கவின் நோக்கங்களும் கடமைகளும் பற்றியும், அதன் வேலைத்திட்டம்,கட்சி அங்கத்தவம் முதலானவை குறித்தும் வளர்முக நாடுகளிலுள்ள எமது வாசகர்கள் கேட்கிறார்கள். ''சோவியத் ஒன்றியத்தில் ஒரு கம்யூனிஸ்ட்டாக இருப்பதன் அர்த்தம் என்ன?' என்ற நூலின் ஒரு பகுதியை இங்கு வெளியிடுகிறோம்.
>
> சோ.க.க. மத்தியக் கமிட்டியின் அரசியல் குழு உறுப்பினரும், மத்திய கமிட்டியின் செயலாளருமான கொன்ஸ்தாந்தின் செர்னென்கோ எழுதிய இந்நூல் ஏபினன் பதிப்பகத்தால் 1978ல் வெளியிடப்பட்டது.

சோஷலிஸத்தை நிர்மாணிப்பதற்கு தொழிலாளி வர்க்கமும் அதன் முன்னணிப்படையான கம்யூனிஸ்ட் கட்சியும் மிகச் சிறப்பாக ஸ்தாபனரீதியாகத் திரண்டிருப்பதுவும், சித்தாந்த ரீதியில் ஐக்கியப்பட்டிருப்பதும் உறுதிமிக்கதாகவும், தைரியமிக்கதாவும் இருப்பதுவும் அவசியம் என்பதை அனுபவம் எடுத்துக்காட்டுகிறது.

இன்று சோ.க.க.வின் உறுப்பினர் தொகை 1-கோடி 65லட்சத்திற்கும் அதிகமானதாகும். சோவியத் நாட்டிலுள்ள 100-க்கும் கூடுதலான தேசங்களினதும் தேசிய இனங்களினதும் தலைசிறந்த பிரதிநிதிகள் இவர்கள் கட்சியின் பலம் எண்ணிக்கையில் மட்டுமல்ல, மாறாக அதன் அசைக்கமுடியாத ஐக்கியத்திலும், ஒருமைப்பாட்டிலுமே தான் தங்கியுள்ளது.



## கட்சி உறுப்பினர்களின் உரிமைகளும் கடமைகளும்

கட்சி அணியில் சேர்வதற்கு ஒருவருக்கு இருக்க வேண்டிய தகைமைகள் என்ன?

சோ.க.க. அமைப்புவிதிகளின் பிரகாரம் கட்சியின் வேலைத்திட்டத்தையும் விதிகளையும் ஏற்கும், கம்யூனிஸ நிர்மாணத்தில் முனைப்பாகப்பங்குபற்றும், கட்சி அமைப்புகளில் ஒன்றில் பணிபுரியும், கட்சிமுடிவுகளை அமுல்படுத்தும் அங்கத்தவக் கட்டணத்தைச் செலுத்தும் 18-வயதினையடைந்த எந்தவொரு சோவியத் பிரஜையும் கட்சி உறுப்பினராகலாம்.

பொதுவான உலகக் கண்ணோட்டத்தை கொண்டிருப்பதே கம்யூனிஸ்ட்டுகளின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் உத்தரவாதப்படுத்துகிறது. கட்சி வேலைத்திட்டமும் விதிகளும் பற்றிய பூரண விளப்பம் கொண்டிருப்பதும் அவற்றை ஒதுக்கீடுகள் இன்றி ஏற்பதும் அவசியம். கட்சியில் சேரும் ஒருவர் கட்சி விதிகளுக்கும் தரங்களுக்கும் அமைய வாழவும் செயல்படவும் கடமைப்பட்டுள்ளார்.

கட்சித் திட்டத்தையும் விதிகளையும் ஏற்றுக்கொள்வது மட்டும் போதாது. கட்சியின் இலட்சியங்களுக்காகப் போராடத் தமக்குள்ள ஆற்றலைக் கட்சிஉறுப்பினர்கள் வெளிக்காட்ட வேண்டும். கட்சியின் ஆரம்ப அமைப்புகள் ஒன்றில் சேர்ந்து பணியாற்றுவது கட்சி அங்கத்துவத்தின் முக்கியமான தேவையாகும்.

இன்னுமொரு பிரதான தேவை கட்சி முடிவுகளைச் செயல் படுத்துவதாகும். இது கட்சியின் உயர் அமைப்புகளிலிருந்து ஆரம்ப அமைப்பு வரை பொருந்தும் மேல் அமைப்புகளின் முடிவுகள் கிடைத்ததும் அல்லது சொந்த முடிவுகளை எடுத்ததும் ஆரம்ப அமைப்பு அவற்றைச் செயல்படுத்துவதற்கான பொறுப்புகளை அவரவர்களுக்கு வழங்குகிறது, பின்னர் அவை அமுல் படுத்தப்படுவதை கவனிக்கிறது.

கட்சிக்கு பொருளாதார ஆதரவளிப்பதும் கட்சி அங்கத்துவத்திற்கான இன்னொரு தேவையாகும்.

கட்சிக்கு எங்கிருந்து பணம் கிடைக்கிறது? கட்சிப் பத்திரிகைகளினதும் நூல்களினதும் விற்பனை மூலம் கணிசமானளவு கிடைகிறது. கட்சி உறுப்பினர் அங்கத்துவக் கட்டணப்பணமும் முக்கியமான வருவாயாகும். அங்கத்தவக் கட்டணத்தை ஒழுங்காகச் செலுத்துவது

கம்யூனிஸ்ட்டுகள் கட்சியுடன் தமது உறவுகளை வலுப்படுத்தவும் அதேபோல கட்டுப்பாட்டையும் ஸ்தாபன அமைப்பையும் சக்திப்படுத்தவும் உதவுகிறது.

இவையே சோ.க.க அங்கத்துவத்திற்கான முக்கிய தேவைகளாகும் கட்சியின் தூய்மையைப் பேணவும் அதன் ஒருமைப்பாட்டையும் வலுவையும் சக்திப்படுத்தவும் இவை நிலையுறுதியுடன் செயல்படுத்தப்படுவது அவசியம்.

இந்தக் கோட்பாடுகள் கம்யூனிஸ்ட்களின் நடத்தைத் தரங்களை, கடமைகளை, உரிமைகளை நிர்ணயிக்கின்றன.

ஒரு கம்யூனிஸ்ட் தனது வேலையை ஐயந்திரிபறத் தெரிந்திருக்க வேண்டும், தனது பணி மூலம் மற்றவர்களுக்கு ஒரு முன்னுதாரணமாக இருக்க வேண்டும் ஆனால் இது மட்டும் போதாது. விஞ்ஞான சோஷலிஸத்தின் புரட்சிகர தத்துவத்தை ஒரு கம்யூனிஸ்ட் தொடர்ச்சியாகவும் கசடறவும்கற்க வேண்டும், நாட்டின் அரசியல் வாழ்விலும் முனைப்பாகப் பங்குபற்ற வேண்டும். பரஸ்பர உதவி—ஒத்துழைப்பு உறவுகளை வளர்க்க வேண்டும்.

கட்சியின் சித்தாந்த ஸ்தாபன ஐக்கியத்தை வலுப்படுத்தமுடிந்ததனைத்தையும் செய்வதும், கட்சியின் அதிகாரத்துவத்தை பலவீனப்படுத்தும் அல்லது சீர்குலைக்கும் எந்த நடவடிக்கையையும் சகிக்காமலிருப்பதும் கட்சி உறுப்பினர்களின கடமையாகும். விமர்சனத்தையும் சுயவிமர்சனத்தையும் உத்சாகப்படுத்துவதும், குறைபாடுகளை அம்பலப்படுத்துவதும், அவற்றைததாண்டுவதற்கான ஆலோசனைகளை முன்வைப்பதும்கம்யூனிஸ்ட்டுகளின் கடப்பாடுகளாகும்.

சோவியத் கம்யூனிஸ்ட்டுகளின் கடப்பாடுகள் அவர்களின் உரிமைகளுடன்பிரிக்கப்படமுடியாது இணைந்துள்ளன. ஒரு கட்சி உறுப்பினருக்கு கட்சி அமைப்புகளுக்குத் தெரிவு செய்யவும் தேர்ந்தெடுக்கப்படவும், கட்சியின் அரசியல்—நடைமுறை பிரச்னைகள் பற்றிக் கட்சிக் கூட்டங்களிலும் மாநாடுகளிலும், காங்கிரஸ்களிலும் சுதந்திரமாகக் கருத்துத் தெரிவிக்கவும், குறிப்பிட்ட ஒரு பிரச்னைபற்றி இறுதி முடிவு எடுக்கும் வரை பத்திரிகைகளிலும் மற்றும் வழிகளிலும் தனது நிலையை வலியுறுத்தவும் உரிமை உள்ளது. சோ.க.க.வின் மத்தியக் கமிட்டி வரை எந்த உயர்கட்சி அமைப்புக்கும் தனது கருத்துக்களை, ஆலோசனைகளை, வேண்டுகோள்களைத் தெரிவிக்க கட்சி அங்கத்தவர்களுக்கு உரிமை உண்டு.

## கறாரான தேர்வு

கட்சி உறுப்பினர்களின் கடமைகள், உரிமைகள்பற்றிய அமைப்பு விதிகள் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்த



வையாகும். ஏனெனில் ஒருகம்யூனிஸ்ட்எப்படிப்பட்டவர்என்பதை இவை நிர்ணயிக்கின்றன. ஒவ்வொருவரும் பற்றிய கறாரான தனிப்பட்ட தேர்வின் அடிப்படையிலேயே கட்சி தனது அணியை வலுப்படுத்துகிறது. கட்சியில் சேர விரும்பும் எல்லோருமே சேர்க்கப்பட்டு விடுவதில்லை. மாறாக தொழிலாளர்களின் விவாசயிகளின், அறிவுஜீவிகளின் தலைசிறந்த பிரதிநிதிகளுள் தலைசிறந்தவர்களே சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

கட்சியில் சேர விரும்புபவர்கள் ஆரம்ப கட்சி அமைப்புக்கு விண்ணப்பப்பந்திரத்தை நிரப்பி அனுப்புகிறார்கள். இதற்கு மூன்று கட்சி உறுப்பினர்கள் எழுத்து மூலம்சிபார்சு செய்ய வேண்டும். விண்ணப்பதாரர் கம்யூனிஸ்ட்டாக இருப்பதற்கு அருகதையுள்ளவர் என்பதை இந்த சிபார்சுகள் உத்தரவாதமளிக்கின்றன. சிபார்சு செய்பவர்கள் விண்ணப்தாரர். தனது உழைப்பு, சமூகக் கடமைகளை எவ்வாறு நிறைவேற்றுகிறார். என்பதை நன்கு தெரிந்திருக்க வேண்டும். விண்ணப்பதாரரின் அரசியல், தார்மீக குணம்சங்கள், உழைப்பார்வம் பற்றிய உண்மையான, மெய்யான சான்றினை இவர்கள் அளிக்கவேண்டும்.

கட்சியில் சேர்ப்பது ஆரம்ப கட்சி அமைப்பின் கூட்டத்தில் தீர்மானிக்கப்படுகிறது. கூட்டத்தில் பங்குபற்றுபவர்களில் மூன்றில் இரண்டு பங்கினருக்கு குறையாத வாக்குகள் கிடைத்தாலேயே விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்பட்டதாக விருக்கும்.

ஆனால் முழு அங்கத்தவராவதற்கு முன்னர் 12 மாதங்களுக்கு அவர் அபேட்சக உறுப்பினராகப் பணியாற்ற வேண்டும். இந்தக் காலப்பகுயில் அவர்கட்சியின்வேலைத்திட்டத்துடனும் விதிகளுடனும் பரிச்சயத்தை ஏற்படுத்திக் கொள்வதுடன் முழுமையான கட்சி அங்கத்துவத்திற்கு தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்கிறார். இந்தக் காலப்பகுயில் அபேட்சக உறுப்பினரின் தனிப்பட்ட குணம்சங்களைத் தெரிந்து கொள்ள கட்சி அமைப்புக்கு வாய்ப்புக்கிடைக்கிறது.

முழு உறுப்பினர்கள் போலவே அபேட்சக அங்கத்தினரும் அதே கடமைகளையே நிறைவேற்றுகிறார்கள். கட்சிக் கூட்டங்களில் இவர்கள் பேசமுடியும் என்றாலும் வாக்களிக்கும் உரிமையோ அல்லது உயர் கட்சி அமைப்புகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உரிமையோ இவர்களுக்கு இல்லை.

அபேட்சக அங்கத்தவக் காலம் முடிந்ததும் முழு உறுப்பினராக்குவது பற்றிய பிரச்னை ஆராயப்படுகிறது. இவர்கள் முழு அங்கத்துவம் கோரி புதிதாக விண்ணப்

பிக்க வேண்டும். கட்சி உறுப்பினர்கள் மூவர் இந்த விண்ணப்பத்தை சிபார்சு செய்ய வேண்டும். கட்சி உறுப்பினராக இருப்பதற்கு தான் தகுதியானவர் என்பதை அவர் நிரூபிக்கும் பட்சத்தில் அவருக்கு முழு அங்கத்துவம் அளிக்கப்படுகிறது. அபேட்சக காலத்தில் கட்சி அங்கத்தவருக்குத் தேவையான பண்புகளை வெளிப்படுத்தாவிடில் அவரது விண்ணப்பம் நிராகரிக்கப்படுகிறது. இவ்வாறு நிராகரிக்கும் முடிவு மாவட்ட அல்லது நகர கமிட்டியால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் அவர் அபேட்சக அங்கத்தவராகவும் கருதப்படமாட்டார்.

ஒரு புதிய உறுப்பினரை தனது அணியில் சேர்க்கும் போது கட்சி லெனினின் கோரிக்கையாலேயே வழிநடத்தப்படுகிறது. ஒவ்வொரு கட்சி உறுப்பினரும் கட்சிக்குப் பொறுப்புதாரியாவார், கட்சி ஒவ்வொரு உறுப்பினருக்கும் பொறுப்பேற்கிறது என்பதே இக் கோரிக்கை.

மிகக் கறாராகத் தெரிவு செய்தாலும் கூட ஒரு புதிய உறுப்பினர் போதியளவு செயல் வேகம் உள்ளவராகவும், கட்சி—ராஜ்ய ஒழுங்குகளை மீறாதவராகவும், கம்யூனிஸ தார்மீகதரமுடையவராகவும் இருப்பார் என்பதற்கான உத்தரவாதமில்லை. கட்சித் திட்டத்தையும் விதிகளையும் ஒரு உறுப்பினர் மீறினால் கட்சி அமைப்பு அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும். அவர் எச்சரிக்கப்படலாம், உத்தியோக பூர்வமான கண்டனத்திற்குட்படுத்தப்படலாம். தமது நடவடிக்கை மூலம் கட்சிக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவோர் கட்சியிலிருந்து வெளியேற்றப்படுவர்.

ஆரம்ப கட்சி ஸ்தாபனத்தின் கூட்டத்தில் இத்தகைய முடிவு எடுக்கப்படுகிறது. கூட்டத்தில் பங்குபற்றுபவர்களுள் மூன்றில் இரண்டு பங்கினரின் வாக்குகள் கிடைக்க வேண்டும். மாவட்ட கமிட்டி அல்லது நகரகமிட்டி அங்கீகரித்த பின்னரே இம் முடிவு அமுலுக்கு வரும்.

சோ.க.க.வின் அமைப்பாக்கம் என்ன? தொழிலாளர்கள் மொத்த அங்கத்துவத்தில் 42 சதவீதமும், விவசாயிகள் 14 சத வீதமும், மூளை உழைப்பாளிகள் 44 சத வீதமுமாகும். ஆகவே சோ.க.க. இன்று அனைத்து மக்களினதும் கட்சியாக உள்ளது.

எனினும் கம்யூனிஸ்ட் கட்சி தனது வர்க்க குணம்சத்தை எந்த விதத்திலும் இழந்து விடவில்லை. தனது இயல்பினால் சோ.க.க. எப்போதும் தொழிலாளி வர்க்க கட்சியாகவே இருந்துள்ளது, தொடர்ந்தும் இருக்கும். அண்மைக் காலத்தில் கட்சியில் சேரும் அங்கத்தவர்களுள் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பது யஇல்பானதே.



சோவியத் ஒன்றியத்தில் சோஷலிஸத்தின் வெற்றியோடு கட்சியின் வளர்ச்சிக்கான சமூக அடித்தளம் வியாபித்துள்ளது. தொழிலாளி வர்க்கத்தின் கம்யூனிஸ இலட்சியங்களின் வெற்றிக்காகப் பாடுபடும் சோ.க.க. உழைக்கும் மக்களது ஏனைய பிரிவுகளின் தலைசிறந்த பிரதிநிதிகளைத் தனது அணியில் வைத்திருப்பதில் அக்கறை கொண்டுள்ளது.

தனது அணியில் இளைஞர்களைச் சேர்த்துக் கொள்வதில் கம்யூனிஸ்ட் கட்சி பெரும் ஆர்வத்தை எல்லாக் காலங்களிலும் கொண்டிருந்துள்ளது. தலைமுறைகளின் தொடர்ச்சியிலும், புரட்சிகர உணர்வும் புரட்சிகர பாரம்பர்யமும் இடையறாது முன்னெடுத்துக் செல்லப்படுவதிலும் அது ஆழ்ந்த சிரத்தை கொண்டுள்ளது. 23 வயது வரையுள்ள இளைஞர்கள் இளம் கம்யூனிஸ்ட் லீக் மூலம் கட்சியில் சேர விண்ணப்பிக்கலாம் இப்போது கட்சியின் புதிய அங்கத்தினரில் மூன்றில் இரண்டுபங்கிற்கும் கூடுதலானவர்கள் கம்ஸமோல் உறுப்பினர்களாக முன்னர் இருந்தவர்களே.

தனது அணியில் பெண்களைச் சேர்ப்பதில் கட்சி விசேஷ அக்கறை காட்டுகிறது. இப்போது மொத்த உறுப்பினர் தொகையில் மாதர் கால்வாசிக்கும் அதிகமானவர்களாவர்.

★ ★

கம்யூனிஸ்ட்டாக இருக்க யாருக்கு அருகதை உள்ளது என்பதற்கான மிகச் சிறந்த விளக்கத்தை லியோனிட் பிரெஷ்னேவ் தந்துள்ளார். அவர் கூறினார்: கம்யூனிஸ்ட்டுகளுக்கு ஒரே ஒரு சலுகைதான் உள்ளது. அதாவது பொது இலட்சியத்திற்கு மற்றவர்களிலும் பார்க்க கூடுதல் பங்களிப்பைச் செய்வது; அதன் வெற்றிக்கு ஏனையோரிலும் பார்க்க முனைப்பாகப் போராடுவதும், சிறப்பாகப் பணியாற்றுவதும். எங்கு பணி மிக மிக கஷ்டமானதாக இருக்கிறதோ அங்கு முன்னணியில் இருப்பதைத் தவிர வேறெந்த சலுகையும் ஒரு கம்யூனிஸ்ட்டுக்க இருக்க முடியாது.

## சர்வதேச சிறுர் ஆண்டு

எலெனு நொவிகோவா

சோ.சோ.கு.ஒ. சுகாதாரத்துறை துணை அமைச்சர்.

# சிறுவர்களுக்கானதோர் ஆனந்த எதிர்காலம்

> **1979ம் ஆண்டை சர்வதேச சிறுர் ஆண்டெனை ஐ.நா.சபை பிரகடனப்படுத்தி உள்ளது. இவ்வாண்டை சிறுர் ஆண்டாகக் கொண்டாடுவதிலும் அதன் மூலம் சிறுவர்களின் பிரச்னைகள் சம்பந்தமாக நாடுகளினதும் மக்களினதும் அவதானத்தை கவருவதிலும் சோவியத் மக்கள் முழுமனதோடு ஈடுபட்டுள்ளனர்.**

**எ**திர்காலத்தைக் கட்டியெழுப்புகிற, உருவாக்குகிற, நாளைய வருகையைத் துரிதப்படுத்துகிறவர்களைப் பற்றிய சிறுவர்களைப் பற்றிய எதிர்கால சிந்தனை இப்போது எம் மனங்களில் நெருக்கமாக நிலவுகிறது. 1979ஐ சர்வதேச சிறுர் ஆண்டாகப் பிரகடனப்படுத்தியதன் மூலம் இந்நெருக்கமானது மேலும் துலாம்பரமாகியுள்ளது. சந்தோஷமாயிருப்பதற்கான உரிமை ஒவ்வொரு குழந்தைக்குமிருக்கிறது. தன்னிடமுள்ள சிறந்ததையெல்லாம் குழந்தைகளுக்கு வழங்கவேண்டிய கடப்பாடு மனுக்குலத்திற்குண்டு. இது மாதர் சர்வதேச ஜனநாயக சம்மேளனத்தினதும் ஏனைய முற்போக்குச் சக்திகளினதும் இடையருத முயற்சிகளின் பயனாய் இருபதாண்டுகளுக்கு முன் சிறுவர்களின் உரிமைப்பிரகடனத்தில் பொறிக்கப்பட்டது. அவ்வுரிமைப்



பிரகடனத்திலுள்ள பத்துக் கோட்பாடுகளும் உலகின் அத்தனை குழந்தைகளும் சமத்துவமாய் அனுபவிக்கவேண்டிய உரிமைகளை முன்வைக்கின்றன.

குழந்தைகளின் கல்வி, அவர்களை நல்லோராய் வளர்ப்பது, அவர்தம் உடல்நல, ஒழுக்க வளர்ச்சி என்பனவெல்லாம் பிரதானமான அரச பொறுப்பாக முதலில் மேற்கொண்டநாடு உலகிலேயே சோவியத் யூனியனே. ஒரு நீண்டகால வேலைத்திட்டமாகவும் சர்வதேச சிறுர் ஆண்டின் கட்டுக்கோப்புக்குள் ஒரு குறிக்கோளாகவும் ஏற்கப்பட்டனவெல்லாம் சோவியத் யூனியனில் வெகுகாலத்திற்கு முன்பே யதார்த்தமாகியுள்ளன. உதாரணமாக மாபெரும் அக்டோபர் புரட்சி வெற்றியளித்த உடனேயே 1917ல் சோவியத் யூனியனில் சிறுவர்கள் உழைப்பது அரசாங்கத்தினுல் தடைசெய்யப்பட்டது. அனைத்துத்துறை நடுநிலைக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சோ.சோ.கு. ஒன்றியத்தில் மேலும் அறிவு வளர்ச்சிக்கான வழி இளைய தலைமுறையினர்க்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது. தமக்கேற்ற துறையை, தொழிலை, வேலையைத் தெரிவு செய்யும் உரிமை இளையோருக்கு அரசியல் யாப்பிலேயே உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச சிறுர் ஆண்டு பற்றிய ஐ. நா. தீர்மானம் பின்வரும் பிரதான கடமைகளைக் கூறுகின்றது: பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களை உருவாக்கவும், பிள்ளைகளின் பிரத்தியேகமான தேவைகளையும், அவர்களுக்கு வேண்டியவற்றையும் பற்றி பொதுமக்கள் முழுமையாக அறிந்திருப்பதற்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்: (2) பொருளாதார, சமூக அபிவிருத்தித் திட்டங்களோடு சிறுவர்க்கான வேலைத்திட்டங்கள் இணைந்திருத்தல் வேண்டும்.

சிறுவர்களுக்கான அக்கறை என்பது சோஷலிஸ சமுதாயத்தின் அடிப்படையானதோர் கொள்கையடிப்படையிலான நியதியாகும். சிறுவர்களின் நலன்களையும் பிரத்தியேக தேவைகளையும் பற்றி அக்கறைகொண்டுள்ள சோவியத் அரசு தனது முதலாவது ஆண்டுகளில் அழிவுமிக்க அந்த இக்கட்டான காலகட்டத்தில் சாத்தியமானதனைத்தையும் சிறுவர்க்கு வழங்குவதற்கான உண்மையான முயற்சிகளை மேற்கொண்டது. அப்போது முதலே சிறப்பானதனைத்தும் சிறுவர்க்குத் தரப்படவேண்டும் என்பது எம் தேசத்தில் உறுதிமிகு நியதியாகக் கடைப்பிடிக்கப்படுகிறது. ''ஒவ்வொரு குழந்தைக்கும் மகிழ்ச்சிமிகு சிறுபராயம் என்பது கம்யூனிஸ்ட் நிர்மாணத்தின் ஒரு மிகமுக்கியமானதும் புனிதமானதுமான பண்பாகும்'' (சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் வேலைத்திட்டம்).

தேசத்து பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களில் குழந்தைகளின் நலன்களுக்கும் எப்பொழுதும் அக்கறை செலுத்தப்படுகிறது. குழந்தை பராமரிப்பு நிறுவனங்கள், பள்ளிகள், வெளிநோயாளர் கிளினிக்குகள், ஆஸ்பத்திரிகள் என்பன ஆண்டுதோறும் அதிகரிக்கின்றன. 1979ல் 506,000 சிறுர்களுக்கான புதிய பாலர் பாடசாலைகளும் குழந்தைப் பள்ளிகளும், பதினெரு லட்சம் மாணவர்களுக்கான பொதுப் பள்ளிகளும் திறக்கப்படும். சிறுவர்களுக்கான பொருட்களின் விலைகளைக் குறைவாக இருப்பதைக் கவனித்துக்கொள்கிற அரசு அவற்றின் உற்பத்தியும் மோஸ்தர்களும் அதிகரிப்பதையும் கருத்திற்கொள்கிறது.

சோவியத் சிறுவர்கள் நல்லஆரோக்கியமானவர்களாகத் திகழ்கின்றனர். அவர்களுக்கென்று இளம் பயனியர் மாளிகைகள், நாடக, அரங்குகள், நூலகங்கள், இளம் விமானிகள் மற்றும் விண்பயணி, கிளப்புகள், கலை, நாட்டிய நாடக, இசைப் பள்ளிகள் என்பனவெல்லாம் இருக்கின்றன. எனவே எந்தக் குழந்தையும் தனக்குரியதைத் தெரிவு செய்து தன் ஆற்றலை வளர்த்துக் கொள்ள முடியும்.

மாஸ்கோவிலுள்ள தாய், சேய் பாதுகாப்பிற்கான அனைத்து யூனியன் ஆய்வு நிலையம் உட்பட தேசத்தின் எண்ணற்ற ஆராய்ச்சி நிலையங்கள் சிறுர் உடல் நலத்தில் அக்கறை காட்டுகின்றன.

சிறுவர்க்கு சுகாதாரப் பாதுகாப்பளிப்பதன் பொருட்டும் அவற்றிற்கான போதனை முதலியவற்றை வழங்கவும் டாக்டர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் தொழிற்சங்கங்களும், பொதுமக்களும் உதவுகிறுர்கள், தொழிற்சாலைகளின் சமூக அபிவிருத்தித் திட்டங்கள் குழந்தைப் பேற்றுக்குத் தயாராயுள்ள அன்னையர்க்கு உடல்நல நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன; அவை குழந்தைகள் பற்றிய அக்கறையையே பிரதிபலிக்கின்றன.

சமாதானம் என்பது நல்வாழ்விற்கு மிக அத்தியாவசியமானது என்பதால் குழந்தைகளின் எதிர்காலம் பற்றி யோசிக்கும்போது சமாதானம் பற்றியும் யோசிக்கவேண்டியிருக்கிறது. சமாதானத்தை அதிகரிக்கவும், ஆயுத உற்பத்தியை நிறுத்தவும், அணுயுத்த பயமுறுத்தலை ஒழிக்கவும் பாடுபடுகின்ற சோவியத் யூனியன் அதன் மூலம் வளர்ந்துவரும் சந்ததியின் பாதுகாப்பிற்காகவே தன் பங்களிப்பைச் செய்கிறது.

நியூட்ரன் குண்டைத் தடுப்பதே எல்லா நாடுகளின் முற்போக்காளர்களதும் இன்றைய கடமையாயுள்ளது. மனித வாழ்வையே நிர்மூலப்படுத்துதற்காக உருவாக்கப்



பட்டுள்ள இக் கொடிய ஆயுதத்திற்கெதிரான போராட்டமானது இந்த சர்வதேச சிறுர் ஆண்டின் போது மேலும் முனைப்பாகவும், பயன்மிக்கதாகவுமமையும் என்பதில் ஐயமில்லை. எனவே இவ்வாண்டின் மிக முக்கியமானதோர் நிகழ்வாக சமாதானம் பற்றும் எல்லாக் குழந்தைகளுக்கும் எதிர் காலத்தைப் பாதுகாப்பது பற்றிய ஓர் உலக மாநாடு மாஸ்கோவில் இடம் பெறவுள்ளது.

உலகிலுள்ள அத்தனை குழந்தையும் ஆரோக்யமாகவும், ஆனந்தமாகவுமிருப்பதையும், அவர்கள் பருவமெய்திய போது சமாதானத்தையும், நட்புறவையும், இம்மாநிலத்தையும் போஷிக்கவேண்டுமென்பதே எமது வேணவாவாகும்.

## புள்ளிவிவரங்கள்

### குழந்தைகள் சிறப்புரிமைகள் பெற்ற வர்க்கம்

■ குறைவருமான குடும்ப மகப்பேற்று அலவன்சுகள், சிறுர் அலவன்ஸ்கள், சிறுவர் பராமரிப்பு ஸ்தாபனங்களின் சேவைகள் என்பவற்றிற்கான அரச நிதி ஒதுக்கீடு 1950ன் பின் ஒன்பது தடவைகளாலதிகரிக்கப்பட்டு இப்போது சுமார் 260 கோடி ரூபிள்களாயுள்ளது. அரசின் இவ்வித நிதி ஒதுக்கீடுகள்போக கூட்டுறவுகள், தொழிற்சங்கங்கள், ஏனைய ஸ்தாபனங்கள் மற்றும் கூட்டுப் பண்ணைகளும்கூட பங்களிப்பைச் செய்கின்றன.

■ சுமார் 100,000 குழந்தை வைத்தியர்கள் சிறுவர்க்கான சுகாதார பாதுகாப்பளிக்கின்றனர். நகர, கிராமிய பகுதிகளில் சிறுவர்க்கான 12,300 வெளிநோயாளர் கிளினிக்குகளும், 500,000 பேருக்கான சிறுவர் ஆஸ்பத்திரிகளும், 600,000 பேர்களுக்கான செனடோரியங்களும் இருக்கின்றன.

■ ஒரு கோடி 30 லட்சத்திற்குமதிகமான சிறுவர்கள் பாலர் பள்ளிகளுக்கும், குழந்தைப் பள்ளிகளுக்கும் கிரமமாக சமுகமளிக்கின்றனர்.

■ 1978ல் பொதுப் பாடசாலைகளுக்கு 4 கோடி 47 லட்சம் சிறுவர்களும் நடுத்தர தொழிற் பாடசாலைகளுக்கு 19 லட்சம் பேரும், விசேட நடுநிலைப் பள்ளிகளுக்கு 47 லட்சம் பேரும் சென்றனர்.

■ தேசத்திலுள்ள சுமார் 6000 க்கும் மேற்பட்ட இசை, கலைக் கல்லூரிகளில் 10 லட்சத்திற்குமதிகமானோர் இருக்கின்றனர்; 5700 விளையாட்டுப் பள்ளிக்ளுக்கு 20லட்சம் சிறுவர்கள் செல்கின்றனர்.

■ இளம் தலைமுறையினர்க்காக சுமார் 4 600 இளம் பயனியர் மற்றும் பள்ளிச் சிறுர் மாளிகைகள், இல்லங்களும், 1100க்கு மேற்பட்ட இளம் தொழிற் நுட்பவியலாளர் நிலையங்களும், சுமார் 680 இளம் இயற்கை ஆர்வலர் நிலையங்களும் உள்ளன.

■ சுமார் 70 சிறுவர் செய்தித்தாள்களும், சஞ்சிகைகளும் பிரசுரிக்கப்படுகின்றன. 8000 சிறுர் நூலகங்களிலுள்ள புத்தகங்கள், பிரசுரங்களின் எண்ணிக்கை 202,000,000 ஆகும்; பள்ளி நூலகங்கள் 600,000,000 நூல்கள், பிரசுரங்களைக் கொண்டுள்ளன.

■ 16 வயதிற்குட்பட்டோரை வேலைக் கமர்த்துவது சோ.சோ.கு. ஒன்றியத்தில் தடைசெய்யப்பட்டுள்ளது. ''மைனர்கள்'', 18 வயதிற்குட்பட்டோருக்கு குறைந்த வேலை வாரமேயுண்டு. ஆனால் பெரியவர்களுக்குப் போன்றே முழுநேரச் சம்பளம் வழங்கப்படுகிறது.



# ப. பொ. உ. க.
## சில சிறப்பம்சங்கள்

**1977** இல் பரஸ்பர பொருளாதார உதவி கவுன்சிலின் தொழிற்துறை உற்பத்தி 1950-ஆம் ஆண்டின் அளவிலும் பார்க்க 11-மடங்கு கூடுதலாகும். உலக தொழிலுற்பத்தியில் இவற்றின் பங்கு 18-லிருந்து 33-சதவீதமாக அதிகரித்தது. ஆனல் அதே நேரத்தில் பொதுச் சந்தை நாடுகளின் பங்கு 22-லிருந்து 16-ஆகக் குறைந்தது.

★ப.பொ.உ.க. நாடுகள் உலக என்ஜினியரிங் உற்பத்தியில் 33-சதவீதத்திற்குக் கூடுதலானவற்றையும், ரசாயன உற்பத்தியில் ஏறத்தாழ மூன்றில்ஒருபகுதியையும் இயற்கை எரிவாய்வில் 27-சதவீதத்தையும் உற்பத்தி செய்கின்றன.

★1951-க்கும் 1977-க்குமிடையில் ப.பொ.உ.க. நாடுகளுக்கிடையிலான கூடுதல் குறைந்த மட்ட இடைவெளி விகிதாசாரம் 1:3.2இருந்து1;1.2 ஆகக்குறைந்தது: இதுதொழில் துறையில் 1:5இருந்து 1:15 விவசாயத்தில் 1.2 இருந்து 1:1.6ஆகக் குறைந்தது. பொருளாதார வளர்ச்சி மட்டம் சமநிலையை விரைவாக அடைந்து வருவதை இப்புள்ளிவிவரங்கள் குறிக்கின்றன.

★ஐரோப்பிய ப.பொ.உ.க. நாடுகளிலும் கியூபாவிலும் 370-லட்சம் கிலோவாட் ஆற்றலுள்ள அணுமின் நிலையங்களை 1981-1990 காலப்பகுதியில் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. சோவியத் யூனியன் தொழில்நுட்ப உதவியளிக்கும்.

★அக்கறையுள்ள ப.பொ.உ.க. நாடுகளின் முயற்சிகளின் அடிப்படையில் சோவியத் யூனியனில் இரண்டு அணு மின் சக்தி நிலையங்கள் (கொன்ஸ்டன் டினேவ்ஸ்கயா, கெமில்னிட்ஸ்கயா) நிர்மாணிக்கப்படும். இவை உற்பத்தி செய்யும் மின்சாரத்தில் அரைவாசி பல்கேரியா, ஹங்கேரி, போலந்து,

ருமேனியா, செக்கோஸ்லவாக்கியா ஆகிய நாடுகளுக்கு வழங்கப்படும்.

★ஐரோப்பிய ப.பொ.உ.க. நாடுகளில் வீட்டு நிர்மாண விகிதத்தை பின்வரும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. 1977-இல் இவை 3,086,000 தட்டுமனைகளை நிர்மாணித்து குடியிருப்பாளர்களுக்கு வழங்கின. அதாவ 1949-ல் நிர்மாணிக்கப்பட்டதிலும் பார்க்க மூன்று மடங்கு கூடுதல் தட்டுமனைகளை நிர்மாணித்தன.

★1964-லிருந்து ப.பொ.உ.க.நாடுகள் கூட்டு நாணயத்தின்—மாற்றக் கூடிய ரூபிளின் அடிப்படையில் சர்வதேச நாணய அமைப்பை இயக்கி வருகின்றன.

★ப.பொ.உ.க.வில் 30-க்கும் அதிகமான சர்வதேச பொருளாதார அமைப்புகள் இயங்குகின்றன. இவற்றில் ஒன்று 1964-ல் அமைக்கப்பட்ட பொது சரக்கு வண்டிச் சேவை. இது ப.பொ.உ.க. நாடுகளினது சர்வதேச சரக்கு போக்குவரத்தில் மூன்றில் இரண்டு பங்கை கையாள்கிறது.

★ஆசிய, ஆபிரிக்க, தென்அமெரிக்க நாடுகளில் ப.பொ.உ.க. அங்கத்தவ நாடுகளின் உதவியுடன் 3560-திட்டங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. அல்லது நிர்மாணிக்கப்படுகின்றன. 2856 தொழிலகங்கள் ஏற்கனவே நிர்மாணிக்கப்பட்டுள்ளன. 1950 முதல் 1977 வரை வளர்முக நாடுகளுடனான ப.பொ.உ.க. நாடுகளின் வர்த்தகப் புரள்வு 40மடங்காக அதிகரித்தது. தேசிய நிபுணர்களைப் பயிற்று விக்க ப.பொ.உ.க'நாடுகள் வளர்முக நாடுகளுக்குப் பாரிய உதவிகளை வழங்குகின்றன. 100க்கும் கூடுதலான வளரும் நாடுகளின் 40ஆயிரத்திற்குமதிகமான பிரஜைகள் ப.பொ.உக. நாடுகளில் கல்விபயில்கிறார்கள்.

யும்ஜாகின் செடென்பால்*

# மொங்கோலியா: முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதை

மொங்கோலிய மக்கள் புரட்சிகர கட்சித் தலைமையின் கீழ் அத்தேசத்தை ஒரு தொழில்-விவசாய நாடாக வெற்றிகரமாக மாற்றிவரும் தொழிலாள மக்கள் ,1976 ஜூனில் நடந்த மொ.ம.பு.கட்சியின் 17-வது காங்கிரசின் தீர்மானங்களால் வழி நடத்தப் பெற்று சோஷலிஸத்தின் பொருளாயத, தொழில்நுட்ப அடித்தளத்தை நிறுவுவதை நிறைவேற்றிவருகிறார்கள். கட்சியின் வேலைத்திட்டத்தில் முன்வைக்கப்பட்ட பிரதான கடமைகளை காங்கிரஸ் விரிவாக்கியும் பகுத்துமுள்ளதோடு1976-1980க்கான மொம.பு. கட்சியின தேசிய பொருளாதார மற்றும் கலாசார வளர்ச்சிக்கான வழிகாட்டலையும் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் பிரதான சமூக-பொருளாதார கடமையானது சமூகஉற்பத்தியில் மேலும வளர்ச்சியையும், அதன் முனைப்பாற்றலை உயர்த்துவதையும், தேசிய பொருளாதாரம் மற்றும் கலாசாரத் துறைகளின் எல்லாக்கிளைகளிலும் வேலைத்தரத்தை சீராக்குவதையும், இவ்வடிப்படையில் மக்களின் வாழ்க்கைத்தரத்தையும் கலாசார தகைமைகளையும் ஸ்திரமாக உயர்த்துவதையும் உறுதிப்படுத்தும்.

மார்க்ஸிய தத்துவம் என்பது ''உலகின் ஆழ்ந்த தத்துவார்த்த உள்ளடக்கத்தால் ஒளியூட்டப்பெற்ற, வரலாற்றின் அறிவு வளங்கொண்ட அனுபவத்தின்தொகுப்பாகும்''[1] என்று லெனின் எழுதினர். முன்னாள் பின்தங்கிய நாடுகள் சில

---

* மொங்கோலிய மக்கள் புரட்சிகரக் கட்சி மத்திய கமிட்டி முதற் செயலாளர், மொ.பு.க. தேசியப் பேரவை தலைமைக்குழுத் தலைவர்.

1 வி.ஐ.லெனின், திரட்டு நூல்கள், பா.25, பக். 412

சந்தர்ப்பங்களில் முதலாளித்துவத்திற்கு முந்திய சமூக உறவுகளிலிருந்து முதலாளித்துவ கட்டத்தைக் கடந்து சோஷலிஸத்திற்குச் செல்லலாம் என்றமுற்றபோக்கான கருத்தை ஏகாதிபத்திய சகாப்தத்திலான புரட்சிகர போராட்டத்தை ஆராய்ந்துபெற்ற பலத்தோடு அவர் முன்வைத்தார்.

வரலாற்றனுபவமும் குறிப்பாக மொங்கோலிய மக்கள் புரட்சிகரக் கட்சியும் லெனினது கருத்தின் பிசகற்ற தன்மையை முழுமையாக உறுதிப்படுத்தின. காலனித்துவ நுகத்தடியைத் தூக்கியெறிந்த எல்லா மக்களுக்கும் இது அடிப்படை முக்கியத்துவமிக்கதே. அத்துடன் முதலாளித்துவத்திற்கு முந்திய ஏன் நிலப்பிரபுத்துவத்திற்கு முந்திய உறவுகளின் பல கூறுகளைக் கொண்டிருந்தவர்கள் மேலும் முன்போதலுக்கான வழிகளைத் தேடுகிறார்கள்.

## முதலாளித்துவத்தை தவிர்த்து

1924-ல் நடந்த மொ.ம.பு.கட்சியின் மூன்றாவது காங்கிரஸ் தேசத்தின் அபிவிருத்திக்காக முதலாளித்துவ மற்றதோர் பாதையைப் பிரகடனப்படுத்திற்று. 1940-ல் மொ.ம.பு.க.பத்தாவது காங்கிரஸானது மொங்கோலிய புரட்சியின் பொதுவான ஜனநாயகக் கடமைகள் நிறைவேற்றப்பட்டுள்ளதோடு புரட்சியானது சோஷலிஸக் கட்டத்துள்ளும் பிரவேசித்துள்ளது எனக் குறிப்பிட்ட புதியகட்சி வேலைத்திட்டத்தை ஏற்றுக்கொண்டது. 1960-ன் ஆரம்பத்தில் மொங்கோலிய மக்கள் குடியரசு சோஷலிஸ நிர்மாணத்தை நிறைவுசெய்யும் கட்டத்துள் பிரவேசித்தது. இக் காலகட்டத்தில் நிறைவேற்ற வேண்டிய கடமைகள் 1966-ன் மொ.ம.பு.க. 15-வது காங்கிரசில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்சி வேலைத்திட்டத்தில் தெளிவாக்கப் பட்டிருந்தன.

இவ்விதத்தில் சுதந்திரம் எய்திய நான்கு தசாப்தங்களுக்குள் மார்க்ஸிய—லெனினிய முன்னணிப் படையால் வழிநடத்தப்பட்ட மொங்கோலிய தொழிலாள மக்கள் நிலப்பிரபுத்துவத்திலிருந்து (கொத்தடிமைத்தனம் 1924 யிலேயே ஒழிக்கப்பட்டது) நிலப்பிரபுத்துவத்திற்கு முந்திய உறவுகளிலிருந்துகூட சோஷலிஸத்திற்கான—முழுதையான வரலாற்று சகாப்தங்களை வியாபித்ததோர் பாதையைக் கடந்தனர்.

விஞ்ஞான சோஷலிஸ்த்தின் மூலவர்களான மார்க்ஸும் எங்கெல்சும் முதலாளித்துவத்திற்குட்பட்ட சமூக வளர்ச்சி நிலைமைகள் பற்றிய தமது ஆய்வில் பின்தங்கிய நாடுகள் ''குறுகியதோர்'' காலப்பகுதிக்குள் சோஷலிஸத்திற்கு மாறிச் செல்லும் சாத்தியப்பாட்டை அங்கீகரித்துள்ளனர், ''முதலாளித்துவத்திற்கு முந்திய கட்ட வளர்ச்சியில் எல்லா நாடுகளும்''[1] இந்த முடுக்கப்பட்ட முன்போதலுக்கான சாத்தியத்தைக் கொண்டுள்ளன என எங்கெல்ஸ் நம்பினால்.



முதலாளித்துவத்தின் இறுதியான ஏகாதிபத்தியக் கட்டத்தின் பிரத்தியேகமான நிலைமைகளில் மார்க்ஸ்—எங்கெல்சின் கருத்துகளை விருத்தியுறச் செய்த லெனின் எந்த நாட்டிலும் முதலாளித்துவத்திற்கு முந்திய உறவுகள் அந்நாடு சோஷலிஸத்திற்கு மாறிச் செல்வதற்குக் கடக்க முடியாத தடையாயிருக்க முடியாது என்பதிலும் அவ்வித பின்தங்கிய நாடுகள் மிக முன்னேறிய நாடுகளின் வீறார்ந்த பாட்டாளிவர்க்கத்தின் சகோதரத்துவ ஒத்துழைப்புடன் முதலாளித்துவத்தைக் கடந்துசெல்லமுடியும் என்பதையும் லெனின் உறுதியாக நம்பினார்.

''எம்மைவிட மிகப்பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட இந் நாடுகளுக்கு பிரதியுபகாரம் கருதாத கலாசார உதவிகளை வழங்கவும். இயந்திரங்களைப் பாவிப்பதற்கு மாறிச் செல்வதற்கும். மனிதரின் கஷ்ட உழைப்பைக் குறைக்கவும். ஜனநாயகத்திற்கும்,சோஷலிஸத்திற்குமாக உதவவும் நாம் பெருமுயற்சிசெய்தல்வேண்டும்''[2] என்று லெனின்எழுதினார்.

சோஷலிஸத்திற்கு உலகளாவியரீதில் மாறிச் சென்ற சகாப்தத்தின் வெற்றிமிகு அக்டோபர் புரட்சிக்குப் பின் இந்த மாற்றப் போக்கிலான காலனிகளதும், அரைக் காலனிகளதும் புரட்சிகர விமோசன இயக்கத்தின் பாத்திரம் பற்றிய பிரச்னையானது இந் நாட்களின் முக்கிய அம்சமாயிற்று.

''முன்னேற்றம் கொண்ட நாடுகளின் பாட்டாளிவர்க்கம் பின்தங்கிய நாடுகளின் தொழிலாள வெகுஜனங்களுக்கு உதவியளிக்கக் கூடியதாயிருக்க வேண்டும். அத்தோடு, அம் மக்களுக்கு சோவியத் குடியரசுகளின் வெற்றிமிகு பாட்டாளிவர்க்கம் உதவிக்கரம் நீட்டும் நேரத்தில், ஒத்துழைப்பு வழங்கக்கூடிய நிலைமையிலிருக்கும் நேரத்தில் பின் தங்கிய நாடுகள் தம் வளர்ச்சியின் இன்றைய கட்டத்திலிருந்து உருவாகக் கூடியதாயிருக்கும் என்பது தர்க்கத்திற்கப்பாற்பட்டதாகும் ''[3] என லெனின் எழுதினார். துர்கிஸ்தானிலும் தேசத்தின் ஏனைய பின்தங்கிய பிரதேசங்களிலும் மேற்கொண்ட கம்யூனிஸ்டுகளின் இரண்டரை வருடகால பணிகளிலேயே இச் சொற்கள் நிலைபெற்றுள்ளன.

---

1. கே,மார்க்ஸ்எப்.எங்கெல்ஸ்,திரட்டுநூல்கள்பா:2,பக்;404
2. வி.ஐ.லெனின், திரட்டு நூல்கள், பா:23, பக்:67
3. வி.ஐ.லெனின், திரட்டு நூல்கள், பா:31 பக்,243—244

## புதிய மொங்கோலியாவின் உருவாக்கம்

தொழிலாள மக்களின் மாபெரும் தலைவர் லெனினுலும் மொங்கோலிய மக்களின் மகத்தான புதல்வர் டி. சுக்கே படோரினுலும் மேற்கொள்ளப்பட்ட ரஷ்ய-மொங்கோலிய தொழிலாள மக்களின் விரிவான பிணைப்புகளே மொங்கேலிய மக்களின் விதியை நிர்ணயிக்கலாயின.

ரஷ்ய தொழிலாள வர்க்கத்தினதும் மொங்கோலிய விவசாயிகளதும் வர்க்க ஒற்றுமையையே உலகப் புரட்சிகர மாற்றப்போக்கில் ஒரு அத்தியாவசியமான அம்சமாக லெனின் கருதினர். மொங்கோலியாவில் மக்கள் புரட்சியின் வெற்றியை உறுதிசெய்ததும் முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையில் அது வெற்றிகரமாக முன்னேறிச் செல்வதற்கும் காரணமாயிருந்தது உண்மையில் இந்த வர்க்க ஒற்றுமையேயாகும்.

மொங்கோலியாவில் ஸாரிசமும், ரஷ்ய ஏகாதிபத்தியமும் மேற்கொண்டிருந்த காலனித்துவத்திலிருந்து முறித்துக் கொள்வதென தொழிலாள-விவசாய சோவியத் அரசு 1919 மார்ச்சில் அறிவித்தது.

அந்த நேரத்தில் தோல்வியுற்ற ரஷ்ய எதிர்ப்புரட்சியாளரும் சீன இராணுவாதிகளும் மொங்கோலியாவெங்கும் அட்டூழியம் புரிந்து அத் தேசத்தைப் பாழ்படுத்தினர். எனவே மொங்கோலியாவின் பிரதேச மக்கள் அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் உதவிக்கு வந்த சோவியத் செஞ்சேனை (''ரெட் சோவியத் ஆர்மி) சுக்கே படோரின் குழுவினருடன் சேர்ந்து அவர்களை அத்தேசத்திலிருந்து விரட்டியடித்தனர். அப்பணிமுடிந்த பின் செஞ்சேனை மொங்கோலியாவை விட்டகன்றது. மொங்கோலிய மக்கள் புரட்சிகரக் கட்சி அரசு 1925ல் சோ.சோ.கு.ஒ. அயல் விவகார மக்கள் கமிஸாருக்கனுப்பிய குறிப்பில், ''இப்போது முதல் இந்த யூனியன் மககளும் எமது குடியரசும் தமது பொதுத் தலைவிதி, நலன்கள், நியாயமான மக்களாட்சிக் கருத்துகள் என்பவற்றில் மொங்கோலிய தொழிலாள மக்களும், அவர்தம் அரசும் விசுவசிப்பைக் கொண்டுள்ளதோடு எதிர்காலத்தில் நெருக்கடியான கட்டங்களில் இரு குடியரசுகளும் உண்மையான நட்புறவு மற்றும் பரஸ்பர ஒத்துழைப்பு என்பவற்றை மேற்கொள்ளும். குடியரசின் மக்களும் அரசாங்கமும் யூனியனும் செஞ்சேனையும் எம்மைப் பாதுகாக்க வருமென நாம் உறுதியாக நம்புகிறோம், மோசமான நிலைமை மேலும் குரூரமடைந்தால், 1921ற் போல அவசரகால நிலையொன்று உருவானுல் இது நடந்தே தீரும்'' எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



அது துரதிர்ஷ்டவசமாக நடக்கவே செய்தது. ஜப்பானிய இராணுவவாதிகள் சோவியத் யூனியனுக்கெதிராக தமது தாக்குதலை மேற்கொண்டு மொங்கோலியாவினுள் ஊடுருவி யுத்தப் பிரகடனம் செய்தபோது 1939ல் மொங்கோலிய மக்களின் உதவிக்கு சோவியத் யூனியன் மீண்டும் வந்தது. அதில் நாம் வெற்றியும் பெற்றோம். மொங்கோலியாவின் சுதந்திரம் ஊர்ஜிதமாயிற்று.

## இறைமையும் சர்வதேசியமும்

முதலாளித்துவமற்ற வளர்ச்சிப்பாதையில் செல்லத் தொடங்கிய மொங்கோலிய மக்கள் ஒரே இரவுக்குள் ஒரு சோஷலிஸ சமுதாயத்தைக் கட்டியெழுப்பிவிடவில்லை. அங்கு தொழிற்துறை இருக்கவில்லை, தேசிய நாணயமிருக்கவில்லை, அதன் அயல்துறை வர்த்தகம் அந்நிய மூலதனத்தாலேயே முற்றுமுழுதாகக் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. முதலாவது சோஷலிஸ நாட்டுடன் சேர்ந்து போகாதிருந்தால் மொங்கோலியா பொருளாதார ரீதியில் முதலாளித்துவ உலகிலே முற்றிலும் சார்ந்திருக்க வேண்டியிருந்திருக்கும். ஆனுல் நாம் சோவியத் யூனியனின் நேரடி உதவியைப் பெற்றோம், அதன் அனுபவங்களைக் கற்றோம், முன்னேறலானோம்.

## ப.பொ.உ.க. கட்டமைப்புக்குள்

மொங்கோலியாவின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யவும், உயர்த்தவும் மேற்கொள்ளப்படும் வேலைத் திட்டங்களில் ப.பொ.உ.க. நாடுகள் பெரும் அக்கறை காட்டுகின்றன.

சகோதர சோஷலிஸ நாடுகளின்—விசேடமாக சோவியத் யூனியனின்— தொழில் நுட்ப, பொருளாதார ஒத்துழைப்பினுல் நவீன தொழில்கள், விவசாயம் என்பவற்றிற்கான நிர்மாணங்கள் ஏற்பட்டு எமது நகரங்கள், கிராமங்களின் தோற்றங்களையே மாற்றியமைத்துவருகின்றன.

பொதுக் கல்வி, சுகாதார பாதுகாப்பு என்பவற்றிலெல்லாம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணப்பட்டுள்ளது. இன்று 10,000 பேருக்கு 2714 மாணவர் என்ற ரீதியிலிருக்கின்றனர். வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளிலுள்ளதைவிட இது மிக அதிகமாகும், 10,000பேருக்கு 102 ஆஷ்பத்திரிக் கட்டில்கள், 21 டாக்டர்கள் என்ற விகிதத்திலுள்ளனர். ஆனுல் அரை நூற்றூண்டிற்கு முன் இத் தேசத்தில் சொந்தமான கல்வி அமைப்போ, சுகாதார

பாதுகாப்போ இருக்கவில்லை. அதிகாரிகளுக்கும் பிக்குகளுக்கும்மட்டுமே எழுத வாசிக்கத் தெரிந்திருந்தது.

மொ.பு.க. 17வது காங்கிரசின் கட்டளைகளை எமது கட்சி பின்பற்றுகிறது. அது சகோதர சோஷலிஸ நாடுகளுடன் நெருங்கிய ஒத்துழைப்பைப் பேணுகிறது. தனது சர்வதேசிய கடமையை நிறைவேற்றிவருகிறது.

''நாம் சேர்ந்து பணியாற்றுவதால் அரசியலில் பொருளாதாரத்தில், சமூக வாழ்வின் ஏனைய துறைகலிலெல்லாம் மேலும் சக்தி மான்களாகிறோம்'' என்ற தோழர் எல்.ஐ. பிரேஷ்னேவின் வார்த்தைகளை முற்றாக நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஏகாதிபத்தியவாதிகளாலும் பிற்போக்குச் சக்திகளாலும் மேற்கொள்ளப்படும் கவிழ்ப்பு நடவடிக்கைகளுக்கெதிராக தமது ஆர்வமிகு ஐக்கியத்தைப் பலப்படுத்துவதற்கு உலகின் லட்சோப லட்சம் கம்யூனிஸ்டுகளதும், எமது காலத்தின் எல்லா புரட்சிகர, ஏகாதிபத்திய விரோத சக்திகளினதும் பொது நோக்கத்தையே இச் சொற்கள் பிரதிபலிக்கின்றன.

கம்யூனிஸ்ட், இல 1, 1979

வளரும் நாடுகளின்
இன்றைய பிரச்னைகள்

# பின்தள்ளப்பட முடியாத நிகழ்வுப்போக்கு

சோஷலிஸம் உறுதிப்பட்டதன் விளைவாகவும், ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க அமைப்பு முற்றாகவே தகர்ந்ததன் விளைவாகவும் புதியதொரு உலக அரசியல் கட்டமைப்பு ஸ்தாபிக்கப்பட்டது. இன்று உலக ஜனத்தொகையில் 32.1 சத வீதம் சோஷலிஸ நாடுகளிலும் 49.3 சதவீதம் வளர்முக நாடுகளிலும் வாழ்கின்றனர். ஆக 18.6 சதவீத மக்களே வளர்ச்சியுற்ற முதலாளித்துவ நாடுகளில் வாழ்கின்றனர். 125 வளர்முக நாடுகளும் பெரிதும் சிறிதுமாக 25 வளர்ச்சிபெற்ற முதலாளித்துவ நாடுகளும் இன்று உலகிலுள்ளன.

## காலனியாதிக்கத்தின் எச்சசொச்சங்கள்

காலனியாதிக்க சக்கராதிபத்தியங்களது எச்சசொச்சங்களை இன்னமும் உலகில் காணக்கூடியதாயுள்ளது. கடல் கடந்த நாடுகளில் இன்னமும் தமது நிலைகளை வைத்திருக்கும் நாடுகளில் பிரிட்டன் முதலில் நிற்கிறது. ஹொங்கொங், லத்தினமெரிக்காவின் பிரிட்டிஷ் ஹொண்டுராஸ், மற்றும் அன்டிகுவா, பெர்முடாஸ் போன்ற பல தீவுகளிலும் பிரிட்டன் இன்னமும் காலூன்றியுள்ளது. போர்டோரிக்கோ, பனமா கால்வாய் மண்டலம், வெர்ஜின் தீவுகள், பசுபிக்கிலுள்ள பல தீவுகள் இன்னமும் ஐக்கிய அமெரிக்காவின் காலனியாகவுள்ளன. றியூனியன், மார்தினிக், குடெலொப், நியூ கலெடொனியா, பிரெஞ்சு பொருனேஸியா, மற்றும் பல இடங்கள் இன்னமும் பிரான்ஸின் கடல் கடந்த நிலப்பரப்புக்களாகவுள்ளன. நெதர்லாந்து, ஆஸ்திரேலியா, நியூஸிலாந்து போன்றவற்றிடம் சில காலனிகளுள்ளன. இக்காலனி நாடுகளில் உள்ள ஜனத்தொகை ஏறத்தாழ ஒரு கோடியாம்.

---

1 எம். வொல்கொவ் ''ஏகாதிபத்திய காலனியாதிக்க அமைப்பின் குலைப்பு'' மாஸ்கோ. ஸ்நானியா பிரசுராலயம் 1978. இந்நூலின் சுருக்கமே இக்கட்டுரை.

அதே வேளையில் தெற்கு றொடீஷியாவில் 50 லட்சம் ஆபிரிக்கர்களும் தென்னாபிரிக்கக் குடியரசில் 2கோடி 20 லட்சம் மக்களும் உண்மையில் காலனி அடிமைகளாகவே வாழ்கின்றனர். விஸ்தரிப்புப் பாதையில் அடியெடுத்து வைத்துள்ள இஸ்ரேல் அந்நிய நிலங்களில் காலனிக் ''குடியிருப்புக்களை'' அமைத்துள்ளது. தான் கைப்பற்றிய அரபுப் பிரதேசங்களிலிருந்து, அவற்றின் சொந்த மக்களை பலவந்தமாக அகற்றிவிட்டு ராணுவ காவல் குடியிருப்புக்களை இஸ்ரேல் உருவாக்கியுள்ளது.

எனவே தென்னாபிரிக்காவும் மத்திய கிழக்கும், காலனியாதிக்கத்தின் கடைசிக் கொத்தளங்களை அகற்றுவதற்காகக் கடுமையாகப் போராடும் இரு பிரதேசங்களாகவுள்ளன.

## பூர்ஷுவா பொய்யின் தோல்வி

வரலாற்றைப் பொறுத்தவரை ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க அமைப்பின் தகர்வு மிக விரைவாக நிகழ்ந்துள்ளது. அதாவது அந்நிய நிலங்களைக் கைப்பற்றுவதற்குக் காலனியாதிக்க வாதிகளுக்கு 500 ஆண்டுகள் பிடித்தன. ஆனால் காலனி அடிமைத்தளைக்குட்பட்டிருந்த மக்களோ 30 ஆண்டுகளில் தமது சுதந்திரத்தை வென்றெடுத்துக்கொண்டனர். ஆனால் காலனிகளுக்கு ''இஷ்டபூர்வ''மாகவே சுதந்திரம் வழங்கப்பட்டது என்ற பூர்ஷுவாக்களது பொய்க்கு எந்த ஆதாரமுமில்லை. இம்மக்கள் கடும் பிரயத்தனங்கள், இடைவிடாத, நீண்ட யுத்தங்கள், எண்ணற்ற உயிரிழப்பு ஆகியவற்றின் மூலமே தமது சுதந்திரத்தைப் பெற்றனர்.

தேசிய விமோசன இயக்கம் தனது கோட்பாடு ரீதியான வெற்றிகளை அடைந்த காலகட்டத்தை நாம் கருத்தில் கொள்ளல் அவசியம். ஜப்பானியப் படையெடுப்பாளர்கள் தோல்வியடைய, முடிவுக்குவந்த 2வது உலக யுத்த (1939.1945)த்தைத் தொடர்ந்து, காலனியாதிக்க வாதிகளை எதிர்த்த கடும் போராட்டத்தின் பின்னர் இந்தோசீன மக்கள் தமது சுதந்திரத்தை வென்றெடுத்தனர். சற்றேறக்குறைய 10 ஆண்டுகளில் ஏறத்தாழ ஆசியாவின் முழுக் காலனிகளினதும் மக்கள் தமது சுதந்திரத்தைப் பெற்றுக்கொண்டனர்.

அடுத்த பத்து ஆண்டுகளும், ஆபிரிக்காவின் அதிகப்படியான நாடுகளில் காலனி ஆட்சி தகர்ந்து விழுந்தமைக்கு சாட்சியாக விளங்குகின்றன. உதாரணத்துக்கு முன்னாள் பிரெஞ்சு வடஆபிரிக்கக் காலனியான அல்ஜீரியா 1962ல் சுதந்திரமடைந்தது. இதற்காக அது எட்டாண்டுகள் கடுமையாகப் போராடியது. இப்போராட்டத்தில் பத்துலட்சம் அல்ஜீரிய மக்கள் உயிரிழந்தனர். 1960ம் ஆண்டானது, 17 முன்னாள் ஆபிரிக்கக் காலனிகள் சுதந்திரமடைந்ததனால் காலனி அடிமைத் தளைக்கெதிரான ஆபிரிக்க மக்களது போராட்டத்தின் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. ஆபிரிக்க ஆண்டாக அந்த ஆண்டு வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.



எந்தவொரு காலனியாவது போராட்டமின்றி தனது சுதந்திரத்தைப் பெற்றுவிடவில்லை. காலனி வல்லரசுகள் தமது ஆட்சிக் குட்பட்டிருந்த ஒவ்வொரு துண்டு நிலத்தையும் இறுகப்பற்றியிருந்தன, இறுதிக்காலனிச் சக்கராதிபத்தியமான போர்த்துக்கல் 1975ல் தகர்வுற்றது. கினியா பிஸ்ஸா, மொஸாம்பிக் ஆகிய நாடுகளில் காலனியாதிக்க வாதிகள் ஒன்றன்பின் ஒன்றாகத் தோல்வியடைந்த வேளையில் முடிவுற்ற காலனியுத்தங்களினால் வெறுப்புற்றிருந்த போர்த்துக்கல் மக்கள் பாஸிஸ சர்வாதிகாரத்தைத் தூக்கியெறிந்தனர். இதன் விளைவாக போர்த்துக்கல் தனது காலனிகள் யாவற்றிற்கும் சுதந்திரமளித்தது.

விடுதலையும் சுதந்திரமும் வேண்டி சகல மக்களும் தொடுத்த கடும் போராட்டத்துக்கு சோவியத் யூனியனும் சோஷலிஸ நாடுகளும் விலைமதிப்பற்ற உதவிகளைத் தொடர்ந்து அளித்து வருகின்றன. இந்த ஆதரவு தார்மீக, அரசியல், ராஜதந்திர, ஆயுத வினியோகம் உள்ளிட்ட பொருளாயத உதவிகளைக் கொண்டிருந்தது.

## புதிய முரண்பாடுகள்

ஆசிய, ஆபிரிக்க, லத்தினமெரிக்க நாடுகள் அரசியல் ரீதியில் சுதந்திரம் பெற்ற போதிலும் பொருளாதார ரீதியில் முன்னாள் காலனி அம்சங்கள் பலவற்றைக் கொண்டிருந்தன. காலனியாதிக்கத்தின் கீழ் தோன்றிய பொருளாதார இடைவெளியானது அகற்றப்படவில்லை—மாறாக அது மேலும் அகல்வுற்றது. 1953ல் ஆசிய, ஆபிரிக்க, லத்தினமெரிக்க நாடுகளது மொத்த தேசிய உத்பத்தியானது வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளைக் காட்டிலும் 8.4 மடங்கு குறைவாகவேயிருந்தது. 1973ல் இது 16 மடங்கு குறைவாக விருந்தது,இன்று இந்த இடைவெளி மேலும் அதிகரித்துள்ளது.

இன்றைய உலகில் புதிய புதிய முரண்பாடுகள்—புதிதாக விடுதலையடைந்த நாடுகளின் அரசியல் சுதந்திரத்துக்கும் பொருளாதார ஈர்ப்புநிலைக்கு மிடையிலான முரண்பாடு, தேசிய அரசுரிமைக்கும் பொருளாதாரப் பின்தங்கலுக்கு மிடையிலான முரண்பாடு. தேசிய எழுச்சிக்கும்

தொடர்ந்து நடைபெறும் ஏகாதிபத்தியச் சுரண்டலுக்குமிடையிலான முரண்பாடுகள் தோன்றியுள்ளன. உற்பத்திச் சக்திகளின் துரிதமான வளர்ச்சி, ஆழமான சமுதாய, பொருளாதார, மாற்றங்கள், பொருளாதார; சமூகத் துறைகளில் இன்னுமிருந்துவரும் காலனியாதிக்கத்தின் எச்ச சொச்சங்களைப் பூரணமாக அகற்றுதல் ஆகிய இவற்றினடிப்படையில் பரிபூரணமான பொருளாதார சுதந்திரத்தைக் காண்பதன்மூலமே இந்த முரண்பாடுகளை இல்லாதொழிக்க முடியும், சுருக்கமாகக் கூறுவதாயின், நவீன சுதந்திரப் பொருளாதாரத்தை உருவாக்குதல் காலத்துக்கொவ்வாத சமூக உறவுகளை அழித்தொழித்தல், முற்போக்கான சமுதாய மாற்றங்களை அமுல்படுத்துதல் ஆகியவைதான் வளர்முகநாடுகள் இன்று நோக்கமாகக் கொண்டுள்ள பணிகள்.

ஆசிய, ஆபிரிக்க நாடுகள் தாம் சுதந்திரமடைந்த பின்னர் தமது தேசிய பொருளாதாரத்தை விருத்திசெய்வதற்காகத் திட்டங்களை வகுத்தன. தொழில்மயமாக்கல், தேசிய தொழில்துறைகளை உருவாக்குதல் ஆகியவற்றுக்கு இத்திட்டங்களில் முதலிடமளிக்கப்பட்டது. பல வளர்முக நாடுகளில் பொருளாதாரம் முதலாளித்துவ அடித்தளத்தைக் கொண்டிருந்தமையினுல் காலனியாதிக்கம் விட்டுச்சென்ற பிரச்சினைகளை வெற்றிகரமாகத் தீர்ப்பதற்கு முடியாதிருந்தது. பல வளர்முக நாடுகள் முதலாளித்துவ வளர்ச்சிப் பாதையை நிராகரித்துவிட்டு சோஷலிஸப் பாதையை மேற்கொண்டன.

## புதிய சர்வதேப்ச பொருளாதார ஒழுகுங்

விமோசனமடைந்த நாடுகளின் ''பொருளாதாரத் துறை''களைக் கைவிடுவதற்கு முதலாளித்துவ ஏகபோகங்கள் தயாராகவில்லை. ஆசிய, ஆபிரிக்க, லத்தினமெரிக்க நாடுகளிலிருந்து தமது தொழில்களுக்கு மூலப்பொருள்களின் தடையற்ற வினியோகம் நடைபெறுவதை உத்தரவாதம்செய்ய இவ்வேகபோகங்கள் நவ-காலனியாதிக்க முறைகளைப் பயன்படுத்துகின்றன. இந்நாடுகளில் தமது தொழில் துறைகளைக் கட்டுவதில் ஆதாயமிருப்பின், அத்தொழில்துறைகளைக் கட்டியெழுப்பித் தமது சொந்த நோக்கங்களுக்காகத் தேசிய உழைப்பையும் உள்ளூர் சந்தையையும் சுரண்டுகின்றன.

இன்று புதிய சுதந்திர நாடுகளது போராட்டமானது நவகாலனியாதிக்கத்திற்கு, தொடர்ந்து நடைபெறும் ஏகாதிபத்தியப் பொருளாதார ஆணையிடலுக்கும் எதிராகத் திரும்பியுள்ளது. சர்வதேச பொருளாதார உறவுகளமைப்பில் உள்ள அசமத்துவத்தை அகற்றுவதும் புதிய உலகப் பொருளாதார ஒழுங்கை உருவாக்குவதும் பாதுகாப்பதும்தான் இப்போராட்டத்தின் இலட்சியம். இதற்காக, அவை ஏகாதிபத்தியத்துக் கெதிராக ஒரு ஐக்கிய முன்னணியை உருவாக்கி கூட்டுவேலைத்திட்டம் ஒன்றைப் பிரகடனப்படுத்தியிருப்பதனுல் உலக அரசியலில் ஒரு புதிய நிலை உருவாகியுள்ளது.



வளர்முக நாடுகளின் வேண்டுகோளின்பேரில் 1974 ஏப்ரலில் ஐ. நா. பொதுச் சபையின் 6வது விசேஷ மகாநாடு கூடியது. அது, சர்வதேச பொருளாதார உறவுகளை விவாதித்து, புதிய சர்வதேசப் பொருளாதார ஒழுங்கினை உருவாக்கும் நடவடிக்கைக்கான வேலைத்திட்டத்தையும் நிறைவேற்றியது. நாடுகளது தன்னுதிக்க சமத்துவம், சகல மக்களதும் சுயநிர்ணய உரிமை, ஒவ்வொரு நாடும் தனது சமூக, பொருளாதார அமைப்பைத் தேர்ந்தெடுப்பதற்கான சுதந்திரம், வன்முறைமூலம் நிலங்கள் கைப்பற்றப்படுவது சட்டவிரோதமானது, இதர நாடுகளின் உள் விவகாரங்களில் தலையிடாக் கொள்கை ஆகிய கோட்பாடுகளை இந்த விசேஷ கூட்டம் மேன்மைப்படுத்தியது.

ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டுவிட்ட இக்கோட்பாடுகளை செயல்படுத்த சுதந்திர நாடுகள் உறுதிகொண்டுள்ளன. சர்வதேச பொருளாதார உறவுகளை மாற்றியமைப்பதே அவற்றின் குறிக்கோள்.

அதே வேளையில், 1976 அக்டோபரில் நடைபெற்ற ஐ. நா.வின் 31வது பொதுச் சபைக் கூட்டத்தில் சர்வதேச உறவுகளை முற்றுகவே மாற்றியமைக்கவும் வேறுபாடுகளையும், அசமத்துவத்தையும் அகற்றவும், ஆயுதப் போட்டிக்குக் கடிவாளமிடவும் இதன்மூலம் மீதமாகும் பொருளை பொருளாதார வளர்ச்சிக்குச் செலவிடவுமான அகன்ற வேலைத்திட்டமொன்றை சோவியத் யூனியன் சமர்ப்பித்தது. இணக்க அமைதிக் கொள்கை செயல்படுத்தப்படுவதானது சர்வதேசப் பொருளாதார உறவுகளை மாற்றியமைக்கும் பிரச்சினையின் அவசியத்தை மேலும் உயர்த்தியுள்ளது.

ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க அமைப்புத் தகர்ந்ததும், இன்றைய தேசிய விமோசன இயக்கமும், சோஷலிஸத்துக்கும் முதலாளித்துவத்துக்குமிடையில் நடைபெறும் போராட்டத்துடன் நெருக்கமாகப் பிணைந்துள்ளன. இளம் நாடுகளது எதிர்காலமானது, புரட்சிகரப் போக்குகள் அனைத்தினதும் வளர்ச்சியிலும், இணக்க அமைதியின் வெற்றியிலுமே முற்று முழுதாகத் தங்கியுள்ளன. காலனியாதிக்க அமைப்பின் வீழ்ச்சியானது ஆசிய, ஆபிரிக்க, லத்தினமெரிக்க மக்களுக்கு நவ-காலனியாதிக்கச் சுரண்டலிலிருந்து விமோசனமளிக்கும் ஒரு மாற்றமுடியாத போக்கே.

ருடொல்ஃப் ஸிமென்கோவ்
விஞ்ஞான வேட்பாளர் (பொருளாதாரம்)

# விஞ்ஞானம், தொழில்நுட்பமும் நவ-காலனியாதிக்கமும்

1979 ஆகஸ்ட் மாதம் வியன்னுவில் நடைபெறவிருக்கும் விஞ்ஞானம், தொழில் நுட்பம் பற்றிய ஐ. நா மகாநாட்டுக்கான தயாரிப்பு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இம் மகாநாடு தொழில்துறை வளர்ச்சி பெற்ற முதலாளித்துவ நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்குமிடையிலான தொழில்நுட்பப் பரிவர்த்தனைப் பிரச்சினையை முன்னணிக்குக் கொண்டுவரும்.

விஞ்ஞான, தொழில்நுட்பத் துறையில் வளர்முக நாடுகள் கொண்டுள்ள நிலை ஏகாதிபத்திய நாடுகளைக் காட்டிலும் குறைவானதே. இதற்கு சர்வதேச முதலாளித்துவ உழைப்புப் பிரிவில் முன்னுள் காலனிகளும், சார்பு நாடுகளும் கொண்டிருக்கும் அசமத்துவமிக்க நிலையே சான்று. இன்று உலக முதலாளித்துவப் பொருளாதாரத்தில் நடைபெறும் சகல ஆய்வு, அபிவிருத்தி நடவடிக்கைகள் தொழில் வளர்ச்சிபெற்ற நாடுகளிலேயே நடைபெறுகின்றன. சோஷலிஸ்ட் அல்லாத உலகில் நடைபெறும் ஆய்வு அபிவிருத்திக்கான சகல முதலீடுகளிலும் 98 சதவீதம் இந்நாடுகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்று ஐ. நா. மதிப்பீடு கூறுகிறது. இந்நோக்கத்துக்காக முதலாளித்துவ நாடுகள், வளர்முக நாடுகளைக் காட்டிலும் 49 மடங்கும் நபர் வீதத்தில் 135 மடங்கும் அதிகமாகச் செலவு செய்கின்றன. வளர்முக நாடுகளில் திட்டமிடப்பட்டுள்ளவற்றில் 90 சதவீதம் ஏகாதிபத்திய ஏகபோகங்களுக்குச் சொந்தமானவை. இவ்வாறு புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.



விஞ்ஞான, தொழில்நுட்ப நிபுணர்களிலும் வளர்முக நாடுகள் மிகப் பின்னுக்கே நிற்கின்றன. சோஷலிஸ்ட் அல்லாத உலகிலுள்ள சகல நிபுணர்களைக் காட்டிலும் 10சதவீதத்துக்கும் குறைவாகவே இவை கொண்டுள்ளன. அத்துடன், வளர்முக நாடுகளிலிருந்து நிபுணர்களைக் கவர்ந்திழுக்க முதலாளித்துவ வல்லரசுகள் தம்மாலியன்ற தனைத்தையும் செய்கின்றன. இதன் விளைவாக, 70க்களின் மத்தியில் ஆசிய, ஆபிரிக்க, லத்தினமெரிக்க நாடுகள் 30 ஆயிரத்துக்குமதிகமான தேர்ச்சிபெற்ற நிபுணர்களை ஆண்டுதோறுமிழந்துள்ளன. இந்த ''மூளைசாலிகள் வெளியேற்றம்'' வளர்முக நாடுகளது பொருளாதாரத்தைப் பெருமளவில் பாதித்துள்ளது ஆண்டுதோறும் இந்நாடுகளிலிருந்து வெளியேறி அமெரிக்காவுக்குச் செல்லும் நிபுணர்கள், விஞ்ஞானிகள், பொறியியலாளர்கள், மருத்துவர்கள், சமூகவியலாளர்களது தொகை 11,000 என்று வர்த்தகம் அபிவிருத்திக்கான ஐ.நா. மகாநாட்(அங்டாட்)டின் செயலவை தயாரித்த அறிக்கையொன்று தெரிவிக்கிறது. இது ஆண்டுதோறும் ஐக்கிய அமெரிக்காவுக்கு 370 கோடி டாலர்கள் மேலதிக வருவாயைக் கொடுக்கிறது. இத்தொகை, அமெரிக்கா இன்றைய உயர்கல்விக்கென ஒதுக்கியுள்ள நிதியில் மூன்றிலொன்றுக்குச் சமமானது. கடந்த தஸாப்தத்தில் சில ஆண்டுகளில், இவ்வழியில் ஐக்கிய அமெரிக்காபெற்ற லாபங்கன், அது வளர்முக நாடுகளுக்களிக்கும் உதவியையும் தாண்டிவிட்டன.

## அசமத்துவத்தின் அழுங்குப் பிடி

மேற்குறிப்பிட்ட காரணங்களினுல் தொழில் நுட்பத்தை அவசர அவசியமாக இறக்குமதி செய்யவும், இதற்காக ஏகாதிபத்தியத்திற்கு மிகப் பெருந்தொகைகளைச் செலுத்தவும் வேண்டிய நிலையில் வளர்முக நாடுகளுள்ளன. உதாரணத்துக்கு வளர்முக நாடுகளின் யந்திரத்தொழில்துறையினுல் உற்பத்தி செய்யப்பட்டுஏற்றுமதியாகும்பொருட்களின் கொள்விலையிலும் பார்க்க அவை அதிகபணத்தைச் செலுத்தவேண்டியுள்ளது. தொழில் நுட்பத்துக்காக (மாதிரி வடிவங்கள், லைசன்ஸ்கள் உற்பத்தி செய்நுட்ப அறிவு, நிர்வாகம் மற்றும்பல சேவைகள்) வளர்முக நாடுகள் முதலாளித்துவ நாடுகளுக்குச் செலுத்த வேண்டிய தொகை 1980ல் 900 கோடி டாலர்களாக உயரும்: அதேவேளையில் அவற்றின் பொறியியல்ஏற்றுமதிகள்1970க்களின் மத்தியில் ஆண்டொன்றுக்கு 600-700 கோடி டாலர்களாகவேயிருந்தன. இவ்வாறு அங்டாட்டின் செயலவையின் மதிப்பீடு தெரிவிக்கிறது.

தமது சொந்த மூலப்பொருட்களை தமது நாட்டிலேயே பயன்படுத்தக் கூடிய உற்பத்திக் தொழில்நுட்பத்தைப்

பின்பற்றுவதில் வளர்முக நாடுகள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றன. உதாரணத்துக்கு ஆபிரிக்காவில் உள்ள ஒரே ஒரு ரப்பர் உற்பத்தி நாடான லைபீரியாவிடம், டயர் உற்பத்தித் தொழிலகம் ஒன்றுகூட இன்றுமில்லை. ஆனால் ஏகபோகங்கள் இதர ஆபிரிக்க நாடுகளில் இத்தகைய தொழிற்சாலைகளை அமைத்துள்ளன. தன்ஸனியாவில் வைரங்களை எடுக்கின்ற அதேவேளையில், அங்கு அதை வெட்டுவதற்கான ஒரு தொழிற் சாலையை அமைக்க ஏகபோகங்கள் மறுத்துவிட்டன. பெனின் நாட்டில் சீமெந்து உற்பத்திக்கு அவசியமான சகல மூலப் பொருட்கள் இருந்தும் கூட ஏகபோகங்கள் அங்கு சீமெந்து ஆலை ஒன்றை நிர்மாணிப்பதைப் 15 வருடங்களுக்குப்பின் போட்டன. எந்த வொரு ஆசிய, ஆபிரிக்க, லத்தினமரிக்க நாட்டிற்கும் கையளிப்பதற்காக ஏகாதிபத்திய ஏகபோகங்கள் புதிய திட்டங்களைக் கட்டுவது வழக்கமில்லை. முழுமையாக அல்லது பகுதியாக அந்நிய மூலதனத்தினால் கட்டுப்படுத்தக் கூடிய கம்பனிகளையே அவை உருவாக்குகின்றன. பல்தேதிய இணையங்களது கிளைகளாக அமையும் இக்கம்பனிகள், உற்பத்தித் தொழில்நுட்பத்தை மொத்தமாகப் பெறுகின்றன. இவ்வாறு பொதுத் துறையின் தொழிலகங்களுக்கு இத்தொழில்நுட்பம் செல்வது தடுக்கப்படுகிறது.

சில வேளைகளில், வளர்முக நாடுகளினால் தமது சொந்த பொருளாதார திட்டங்களை எடுக்க முடியாதவகையில் பல ஒதுக்கீடுகளுடன் தொழில்நுட்பம் கையளிக்கப்படுகிறது. உதாரணத்துக்கு தன்னிடமிருந்து மட்டுமே தொழில்துறைப் பொருட்களை, சாதனங்களை, உதிரிப் பாகங்களை, வளர்முக நாடு வாங்க வேண்டிய கட்டாயத்துடனேயே அந்நாட்டிற்கு ஒரு ஏகபோகம் தனது தொழில்நுட்பத்தை விற்கிறது. இவ்வழியில் ஏகாதிபத்திய ஏகபோகங்கள் தமது ஏற்றுமதிகளையும், அவற்றிற்கான விலைகளையும் அதிகரித்துள்ளன. இதர ஒதுக்கீடுகள், வெளிநாட்டுத் தொழில் நுட்பத்தினுதவியுடன் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் ஏற்றுமதியைக் கட்டுப்படுத்துகின்றன. 1970க்களின் மத்தியில் செய்யப்பட்ட ஒப்பந்தங்களில் மெக்ஸிகோவுடனானதில் 97சத வீதமும் இந்தியா—19 சதவீதமும் பெரு-99 சத வீதமும் ஒதுக்கீடுகள் இருந்தன. ஏற்றுமதி மீதுள்ள கட்டுப்பாடுகள் உற்பத்திப் பொருட்களிலான வளர்முக நாடுகளின் வர்த்தகம் வியாபிதமடைவதைத் தடுக்கின்றன. அந்நிய செலவாணியைச் சம்பாதிக்கும் வாய்ப்புக்களை நாசமாக்குகின்றன; கொடுப்பனவு நிறுவையை தலைகீழாக்குகின்றன.

## பாகுபாடுகளுக்கு எதிராக

ஏகபோகங்களது தொழில்நுட்ப சந்தையின் விஸ்தரிப்புக்குக் கடிவாளமிடும் தமது போராட்டத்தை விடுதலை



பெற்ற நாடுகள் அதிகரித்துள்ளன. இது தொடர்பாக, பல்தேசிய இணையங்கள் குறித்த ஐ.நா.கமிஷனில் உருவாக்கப்பட்ட விசேஷ தஸ்தாவேஜு பெரும் முக்கியத்துவத்தைப் பெற்றுள்ளது. ஒழுக்க நடத்தைக்கான சட்டம், இப்பல்தேசிய இணையங்களது பாகுபாடான கொள்கையைக் கட்டுப்படுத்துவதையே நோக்கமாகக் கொண்டது. இந்த நகலின் கருத்துக்களை உருக்குலைக்கும் முயற்சிகளைச் சில ஏகாதிபத்திய வல்லரசுகள் மேற்கொண்ட போதிலும் இத்தஸ்தாவேஜு ஐ.நா.வில் விவாதிக்கப்பட்ட மிக அவசர அவசியமிக்க பொருளாதார விவகாரமாக மாறியுள்ளது.

பெரும் வெளிநாட்டு மூலதனம் மேலாதிக்க நிலையைப் பெற்றுள்ள நவ-காலனியாதிக்கத்தின் அமைப்பு முறையை மாற்றியமைக்க வளர்முகநாடுகள் உறுதிபூண்டுள்ளன. காலத்தின் சோதனைக்கு நின்று பிடித்த, இப்போதுள்ள சட்டங்களின் நிலைகளைச் சீர்குலைக்காது, பொருத்தமான விதிகளை மாற்றியமைப்பதற்கு இதுதான் சரியான தருணம் என்று அந்நாடுகள் கருதுகின்றன. சோஷலிஸ நாடுகளில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அசலான ஸ்தாபனங்கள் நல்ல பயனளிப்பவை; அவை முதலீட்டாளனதும் சமுதாயத்தினதும் நலன்களை ஒன்றிணைத்த மிகப் பொருத்தமான அமைப்பு என்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்கள் பால் வளர்முகநாடுகளது ஆர்வமதிகரித்துள்ளது ஒன்றும் தற்செயலானதல்ல. இதை அங்டாட் மகாநாடு இதர சர்வதேச ஸ்தாபனங்களும் முன்வைத்துள்ள ஆலோசனைகள் பிரதிபலிக்கின்றன.

புதிய சர்வதேச உடன்பாடுகளை உருவாக்கவும் நிறைவேற்றவும் பங்காற்றும் போது, வளர்முகநாடுகள் தமது சொந்த விஞ்ஞான ஆய்வு அடிப்படைகளை உருவாக்கும் முக்கிய பணிக்கும் முடிவுகாண முயல்கின்றன.

தமது விஞ்ஞான, தொழில்நுட்ப ஆற்றலைக்கட்டியெழுப்பவும், தேசிய தொழில்நுட்பக் கொள்கையை உருவாக்கவும் விஞ்ஞான ஆய்வுகளுக்கான திட்டங்களை வகுக்கவும் பல வளர்முக நாடுகள் கடும் முயற்சிகளை எடுத்துள்ளன. தொழில்நுட்பப்பரிவர்த்தனைக்கும் பிராந்திய விஞ்ஞான தொழில்நுட்ப ஒத்துழைப்புக்களை விருத்தி செய்யவுமான தேசிய சட்ட அமைப்பை அவை அறிமுகப்படுத்துகின்றன. தமது பொருளாதார விருத்தியை ஒன்றிணைப்பதும், தொழில்நுட்பம், பொருளாதாரம் சம்பந்தமான ஒருதனிக் கொள்கையை உருவாக்குவதும், ஏகாதிபத்திய ஏகபோங்களது விஸ்தரிப்புக்குப்பதிலடி கொடுக்கும் பிரதான வழிகளில் ஒன்றென வளர்முகநாடுகள் கருதுகின்றன.

தமது தொழில்நுட்ப, பொருளாதாரப் பின்தங்கலை அகற்றுவதற்கு வளர்முகநாடுகள் எடுத்துள்ள கடும் பிரயத்

தனங்களில் சோவியத் யூனியனுடனும் இதர சோஷலிஸ நாடுகளுடனுமான பொருளாதார விஞ்ஞான, தொழில் நுட்பப் பிணைப்புக்களை வலுப்படுத்துவதற்கு அவைபெரும் முக்கியத்துவமளித்துள்ளன. சோஷலிஸ நாடுகளால் ஆசிய ஆபிரிக்க, லத்தினமரிக்க நாடுகளில் நிர்மாணிக்கப்படும் தொழில்துறைகள் அந்நாட்டு மக்களிடமே நேரடியாகவே கையளிக்கப்படுகிறது. இதற்கான கொடுப்பனவுகள், அப் புதிய தொழிலகங்களில் உற்பத்தியாகும் பொருட்களின் வழியே நிறைவு செய்யப்படுகிறது. இந்நடவடிக்கைகள் எந்த வளர்முகநாடுகளது நலன்களுக்கு மிக ஏற்றவையாக வுள்ளன.

1976-ல்நடைபெற்ற சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 25-வது தேசிய மகாநாட்டில், வளர்முகநாடுகள் பாலான சோவியத் யூனியனின் மெய்யான தன்னலமற்ற சர்வதேசக் கொள்கை மீண்டும் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இம்மகாநாடு, நீண்டகால பரஸ்பர அனுகூலமிக்க அடிப்படைகளில், வளர்முகநாடுகளின் தேசிய பொருளாதாரத்தை மேலும் வளர்க்கவும், அவற்றின் பொருளாதார சுதந்திரத்தை நிலை நாட்டவும், விஞ்ஞான தொழில்நுட்ப ஆற்றலைப் பெரிதாக்கவும் கூடிய வகையில் வளர்முகநாடுகளுடனான பொருளாதார, விஞ்ஞான, தொழில்நுட்பப் பிணைப்புக்களை விஸ்தரிக்கவும் வலுப்படுத்தவும் வேண்டுமென வலியுறுத்தியது.

எகொனொமிச் செஸ்கயா கஸட்டா, இல.5,1979

# சித்தாந்த அரங்கு

மிக்கிறிச் நட்சென்யன்க
விஞ்ஞான வேட்பாளர் (வரலாறு)

# நவ–கலோனியலிஸ சித்தாந்தம்

## (விஸ்தரிப்பின் பிரதான திசைகள்)

**நவகலோனியலிஸ சித்தாந்த விஸ்தரிப்பிற்கு புதிதாக விடுதலையடைந்த நாடுகள் இலக்காக்கப்பட்டு வருகின்றன, இதற்கு கம்யூனிஸ விரோதம் பிரதான ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த விஸ்தரிப்பின் வேலைத்திட்டங்கள் இங்கு விவாதிக்கப்படுகின்றன.**

இணக்கவமைதிச் சூழலில் சித்தாந்தப் போராட்டம் முன்னணிக்கு வந்துகொண்டிருக்கிறது. இணக்கவமைதி ஏகாதிபத்தியத்தின் தீவிரச் சக்திகள் பலவற்றைத் தனிமைப்படுத்துவதுடன் 'சோஷலிஸ ஆக்கிரமிப்பு' என்று கூறப்படும் பூர்ஷுவாக் கட்டுக்கதைகளையும் அம்பலப்படுத்துகிறது. ஏகாதிபத்திய நவ-கலோனியலிஸ இராணுவ, அரசியல் விஸ்தரிப்புக்களையும் இணக்கவமைதி கடுமையாகத் தடைசெய்கிறது. ஆகவே கம்யூனிஸ விரோத முன்னணி தனது இராணுவ, அரசியல் முறைகளையும், நிர்ப்பந்த உபாயங்களையும் கைவிடாதபோதிலும், சிந்தாந்த போராட்டத்தினூடாக புதிதாக விடுதலையடைந்த நாடுகளைச் சென்றடைதலை மிகச்சிறந்த ''அணுகு முறை'' எனக் கருதுகின்றன.

பூர்ஷுவாச் சித்தாந்திகள் நவ-கலோனியலிஸத் தத்துவங்களைப் பெருமளவில் பிரசாரம் செய்வதன்மூலம் புதிதாக விடுதலையடைந்த நாட்டு மக்களிடையிலும் அவர்களுடைய சமூக நடவடிக்கைப் போக்குகளிலும் தமது செல்வாக்கை நிலைநிறுத்துவதற்குப் பெரிதும் முயன்றுவருகிறார்கள். புதிதாக விடுதலையடைந்த நாடுகள் எதிர்நோக்கும் முக்கிய சமூகப் பிரச்னைகளுக்கான மார்க்ஸிய-லெனி

ணியத் தீர்வுகளுக்குப் பதிலீடாக நவ-கலோனியலிஸத் தத்துங்களை முன்வைப்பதே அவர்களுடைய நோக்காகும்.

தேசிய விடுதலைப் போராட்டத்தில் நவ-கலோனியலிஸ சித்தாந்தப் பிரசாரங்களை விஸ்த்தரித்தல் பின்வரும் இலக்குகளைக் கொண்டுள்ளது. முதலாவதாக, மார்க்ஸிய—லெனினிய தத்துவத்தினைப் பொய்ப்பிப்பது, புதிதாக விடுதலையடைந்த நாடுகளில் அதற்கு அபகீர்த்தியை ஏற்படுதுவது, உண்மையான சோஷலிஷ அனுபவங்களைப் திரித்துக் கூறுவது; இரண்டாவதாக, முதலாளித்துவமற்ற அபிவிருத்திகளின் தத்துவார்த்த, வரலாற்று அனுபவங்களைப் பொய்ப்பிப்பது. சோஷலிஸ சார்பான நாடுகளின் கொள்கைகள், அவற்றின் நடைமுறை அனுபவங்கள், புரட்சிகர ஜனநாயகப் போக்குகள் என்பவற்றிக்கு அபகீர்த்தி ஏற்படுத்துவது; மூன்றாவதாக, ''சுதந்திர உலகம்'' பூர்ஷுவா ஜனநாய வாழ்க்கை வழிமுறைகள், தனியார் நிறுவனங்கள் என்பவற்றை மேன்மைப்படுத்துதல், அதாவது முதலாளித்துவ சாராம்சமுள்ள ஒவ்வொன்றையும் செயலூக்கத்துடன் பிரசாரம் செய்தல்; இறுதியாக, புதிதாக விடுதலையடைந்த நாடுகள் முதலாளித்துவத்தை நடைமுறைப்படுத்துவதற்கேற்ற சமூக அபிவிருத்தித் தரவுகளையும், திட்டங்களையும் அவற்றின் மீது திணித்தல்.

## பிற்போக்குத் தேசியவாதக் கருத்துக்களின் பிரசாரம்

சர்வதேசியத்திற்கு எதிராக தேசியத்தை தூக்கிப் பிடிப்பதற்கு கம்யூனிஸ விரோதிகள் பெருமுக்கியத்துவம் அளிக்கிறார்கள்.

கம்யூனிஸ விரோதச் சித்தாந்திகள் தேசியவாதம் முதலாளித்துவ, சோஷலிஸ நாடுகள் உட்பட சகல நாடுகளினதும் குணம்சங்களைக் கொண்டுள்ளதென்பதைக் காட்டுவதற்கு முயன்றுவருகின்றார்கள். சமூக, வர்க்க உறவுகளோ அல்லது சுரண்டலோ தேசியவாதத்தின் காரணிகளல்லவென்றும் ஆனால் மனிதனுடைய இயற்கைத் தன்மையே அதுவாகுமென்றும் அவர்கள் கூறுகிறார்கள். இதன் மூலம் தேசிய, கலோனியல் அடக்குமுறைகளின் பழிச்சொல்லிலிருந்தும், இனவாதம், இராணுவவெறி, பாசிஸம், ஸியோனிஸம் என்ற பதாகைகளின் கீழ் நடைபெற்ற ஏகாதிபத்திய குற்றச் செயல்களிலிருந்தும் முதலாளித்துவத்தை மூடி மறைப்பதற்காக அதற்கு ''வெள்ளையடிக்க'' அவர்கள் முனைகிறார்கள்.

தேசியவாதத்தினையும், இராணுவவெறி உணர்வினையும் விசிறிவிடுவதற்காகவும், புரட்சிகரச் சக்திகளையும் தேசிய விடுதலை இயக்கங்களையும் பிளவுபடுத்துவதற்காகவும், உலகின் ஏனைய புரட்சிகரச் சக்திகளுடன், எல்லாவற்றிற்கும் மேலாக உலக சோஷலிஸச் சமூகத்துடன் இவை கொண்டுள்ள கூட்டுப்போக்கினை இரகசியமாய் அழித்



துவிடுவதற்காகவும் சர்வதேசியத்திற்கு அபகீர்த்தியேற்படுத்தும் முயற்சிகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. கம்யூனிஸ விரோதத்துடனிணைந்த பிற்போக்குத் தேசியவாதம் ஜனநாயகபோக்குகள், ஜனநாயக பாரம்பரியங்கள் என்பவற்றிற்கெதிரான விரோத உணர்வுகளை வளர்த்து வருகின்றது. பிற்போக்குத் தேசியவாதத்தின் கம்யூனிஸ விரோத, சோவியத் விரோதச் செயற்பாடுகளைப் பலப்படுத்துவதற்கு நவ-கலோனியலிஸவாதிகள் முனைந்து வருகிறார்கள். பழைய கலோனியல் நாட்டு மக்களிடையே சோஷலிஸத்தின் வரலாற்று அனுபவம், மார்க்ஸிய-லெனினிய தத்துவம் என்பவற்றின் சித்தாந்த ரீதியான செல்வாக்கினைக் குறைப்பதற்காகவே இவையெல்லாம் செய்யப்படுகின்றன.

சோ.சே.கு.ஒ.விலும் ஏனைய சோஷலிஸ நாடுகளிலும் தீர்க்கப்படாத தேசியப்பிரச்னைகள் பல இருப்பதாக நவ-கலோனியல்வாதிகள் பொய்பரப்பிவருகிறார்கள். சோ.க.க வின் தேசியக்கொள்கை, சோ.சோ.கு.ஒ.வில் தேசிய இனப் பிரச்னைகளின் தீர்வு, சோஷலிஸத்தின்கீழ் தேசிய உறவு அபிவிருத்தியின் குணம்சம் என்பவைகளைப்பற்றி அபவாதம்கூறிவரும் நவ-கலோனியலிஸச் சித்தாந்திகள் உண்மையான சோஷலிஸம் தேசிய அடக்குமுறைகளுக்கு முடிவுகட்டிவிட்டதென்ற உண்மையினையும், மக்களிடையே உண்மையான சமத்துவத்தை ஏற்படுத்திவிட்டதனையும், முன்பு பின்தங்கியிருந்த நாடுகள் சகலதுறை அபிவிருத்திகளையும் அடைந்துள்ளதனையும் மறைக்க முயல்கின்றார்கள்.

## சோஷலிஸ சார்புள்ளவைகளுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் முயற்சிகள்

கம்யூனிஸ விரோதச் சித்தாந்திகள் சோஷலிஸச்சார்பு நாடுகளுக்கு விரோதமானவர்கள். இது ஏனெனில், இந்த நாடுகள் நவ-கலோனித்துவவாதிகள் பழைய காலனித்துவ, அரைக்காலனித்துவ நாடுகளில் முதலாளித்துவ உறவுகளை நிறுவுவதனையும், தொடர்ந்தும் இவைகளை உலக முதலாளித்துவப் பிடியின்கீழ் வைத்திருக்கமுயல்வதனையும் எதிர்ப்பதாலாகும். புதிதாகவிடுதலையடைந்த நாடுகளில் மார்க்ஸிய—லெனினிய கருத்துக்களின் பிரபலியம் வளர்ந்துவருவதனையும், அவற்றுட் சில மார்க்ஸிய—லெனினியக் கட்சிகளின் ஆதரவின்கீழ் உள்ளதனையும், சோஷலிஸச் சார்புள்ள அரசுகளின் எண்ணிக்கை அதிகரித்துவருவதனையும், உண்மையான சோஷலிஸ உலகினைநோக்கி, எல்லாவற்றிற்கும் மேலாக சோ.சோ.கு.ஒ.வினை நோக்கி இவை ஈர்க்கப்படுவதனைம் அறிந்த கம்யூனிஸ விரோதிகள் பீதியடைந்துள்ளார்கள். இருந்தபோதிலும் அங்கோலா, மொஸாம்பிக், எத்தியோப்பியா, ஆப்கானிஸ்தான், இன்னும்பல நாடுகளுக்கெதிராக நடாத்தப்பட்ட ஏகாதிபத்தியச் சதித்திட்டங்கள் அவற்றின் முற்போக்கான அபிவிருத்திகளைத் தடைசெய்ய

006042.



அல்லது புரட்சிகர அணிகளை முன்றாக ஒழித்துக்கட்ட நவ-கலோனியலிஸச் சித்தாந்திகள் மேற்கொண்ட முயற்சிகளை அம்பலப்படுத்துகின்றன.

முதலாளித்துவமற்ற அபிவிருத்திகளைச் செய்வதற்கேற்ற பூரணமான மார்க்ஸிய லெனினிய கற்கைநெறிகள் எதுவுமேகிடையாதென்பதனையும், அத்துடன் இது தந்ரோபாய காரணங்களுக்காக போல்ஷ்விக்குகளால் (ரஷ்ய-கம்யூனிஸ்டுக்கள்) ஒருகாலத்தில் முன்வைக்கப்பட்ட பிரசார சுலோகம் மட்டுமேயாகுமென்பதனையும் நிறுவுவதற்கு நவ-கலோனியலிஸச் சித்தாந்திகள் முயன்றுவருகிறார்கள். சோஷலிஸச் சார்பு செயற்கைத் தன்மைவாய்ந்ததென்றும், இது ''மாஸ்கோவின் திட்டங்களின்'' விளைவேயாகுமென்றும் முற்போக்கு அணிகள் ''சோவியத்தின் செய்மதிகள்'' என்றும் அவர்கள் சாதிக்க முயல்கிறார்கள்.

சோஷலிஸச் சார்புள்ள நாடுகளின் சமூக அபிவிருத்தி முறைகளை ஆராய்ந்த நவ-கலானியலிஸச் சித்தாந்திகள் இதே வழிமுறைகள் முதலாளித்துவ அமைப்பின்கீழும் சாத்தியமானவையேயென்றும், காலப்போக்கில் இவையெல்லாம் முதலாளித்துவத்தினை நோக்கிச்செல்வது தவிர்க்க முடியாததென்றும் சாதிக்கமுனைகிறார்கள். இவர்களின் சில சித்தாந்திகள் முற்போக்கு அணிகள் தாம் நிர்ணயித்த இலக்குகளை அடைய முடியாமையினால் சிதறிப்போவது தவிர்க்கமுடியாத செயற்பாடாகுமென குறிசொல்கிறார்கள்.

இவ்வாறான அறிக்கைகள் முதலாளித்துமற்ற அபிவிருத்திப்பாதையில் மார்க்ஸிய—லெனினியச் சிந்தனைகளைத் திரித்துப் பொய்கூறுகின்றன. இச்சிந்தனைகள், முதலாளித்துவமற்ற அபிவிருத்தி சோஷலிஸம்தானென்று கூறவில்லை, அது ஜனநாயகப்பண்புடைய புரட்சிகரமான அபிவிருத்தியென்றே கூறுகின்றன. இந்நிலையின் விசேஷபண்பு, சோஷலிஸத்தைக் கட்டியெழுப்புவதற்கேற்ற புதிய நிலையொன்றிற்கு மாறிச்செல்வதற்கான பொருளாத, சமூக, அரசியல், சித்தாந்த முன்தேவைகளை உருவாக்சிவதேயாகும். மக்களுடைய புரட்சிகர ஜனநாயக அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படும் முதலாளித்துவ விரோத, சோஷலிஸ சித்தாந்த, அரசியற் சார்புடைய சமூக, பொருளாதாரக் கொள்கைகள் இவற்றை நன்கு விபரிக்கின்றன.

உண்மையான சோஷலிஸத்தின் சாதனைகளும், சோஷலிஸ சமூகங்களின் சகல-தட்ட முன்னேற்றங்களும் புதியவர்களைத் தம்பக்கம் ஈர்ப்பதுடன் நவ-கலோனியலிஸ சித்தாந்த அடித்தளத்தினையும் தகர்க்கின்றன. விஞ்ஞான சோஷலிஸம் மக்களுடைய முழுமையான விருப்புக்களை அடையக்கூடிய யதார்த்த வழிகளைக்காட்டுகிறது. உலக சோஷலிஸ சமாஜம் ஏகாதிபத்திய விரோதபோராட்டத்திற்கு மிகவும் சாதகமான சூழ்நிலையை உருவாக்கி, இப்போராட்டத்திற்கு ஆதரவான சகல உதவிகளையும் வழங்குகிறது.

SITHY VINAYAGAR EARLALAI WEST CHUNNAKAM LIBRARY

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பட்டது.

# சோஷலிஸம்
# தத்துவமும் நடைமுறையும்

இம்மாத சஞ்சிகையைப்
பெற பின்வரும் முகவரிக்கு
எழுதுங்கள்

SITHY VINAYAGAR
EARLALAI WEST
CHUNNAKAM
LIBRARY

சோஷலிஸம் தத்துவமும் நடைமுறையும்
சோவியத் தூதரக தகவல் பிரிவு,
27, சேர் ஏர்னஸ்ட் டி சில்வா மாவத்த,
கொழும்பு-7.

பிரகதி-அச்சகம் 93, மாளிகாகந்தை ரோட், கொழும்பு-10.